
www.tamilarangam.net

# சக்தி



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கருத்துக்கள்.

நட்புடன் சக்திசார் சகோதரிகட்கு !

வணக்கம். இதழ் 2 : 1 இல் ஐம்பது டொலர் பெண்ணே ( பார்த்திபன் எழுதியது) மைத்ரேயி எழுதிய " நாமும் மனிதராய். . . " கவிதை பசுலூர் க. பிள்ளை எழுதிய " பழைய பாத்திரங்களின் புதிய நாடகம் " ஆகியன சிந்திக்க வைத்தன. " பேழை " அருமையானதொரு பகுதி ஆனால் இன்னும் கூர்மை தேவை என நினைக்கிறேன். ராஜினி , சிவரமணி ஆகியோரின் நினைவுகள் நெஞ்சில் கவலையைத் தோற்றுவித்தன. சிப்பியின் " பக்கத்து வீடு " ஒரு தெளிவற்ற , தொடர்பற்ற ஆரம்பத் தொடர்.

இதழ் 2: 2 இல் சித்ரலேகா அவர்களின் கட்டுரையில் ' சொல்லாத சேதிகள் ' தொகுப்பு 11 கவிஞர்களின் 24 கவிதைகள் எனக் குறிப்பிட்டிருக்கிறது. அவ்வாறில்லை. 10 கவிஞர்களின் 24 கவிதைகள். 10 கவிஞர்களில் சக்தியில் இருந்து விலகும் மைத்ரேயியும் ஒருவர் என எண்ணுகிறேன். அவ்வாறிருந்தும் ஏன் இந்தத் தவறு?

மேலும் சில எழுத்தாளர்களின் படைப்பை வெளியிடும் போது அதன் தரம் முக்கியம். உதாரணமாக வரட்டு வேததாந்தியான சித்ரலேகாவின் ' தமிழ் இலக்கியத்தில் பெண்கள் -- சில சவால்கள். " கட்டுரை இவர் பெண்ணிலைவாதியா ? ஆண் எதிர்ப்புவாதியா ? மிகவும் கேள்விக்குரிய விடயம்.

' கற்புடைய விபச்சாரி ' யில் வரும் புவனேஸ் போன்ற பெண்களுக்கு ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் தீர்வு என்ன? ஒரு முடிவற்ற சிறுகதை. ' ஜெயலலிதாவின் தேசம் ' அதில் இடம் பெற்ற சில சொற்பிரயோகங்களின் நிமித்தம், மஞ்சள் பத்திரிகை எதிலாவது வெளி வந்திருக்க வேண்டியது. அதே நேரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சி. சிவசேகரம் அவர்களின் ' பாலியல் நிந்தனைச் சொற்களும் ஆணாதிக்கமும் ' ஆக்கமும் வெளிவந்துள்ளது. சக்தியின் ஒப்புமை புரிபடாத தொன்றாகவே யுள்ளது.

தரங் குறைந்த சொற்களைக் கொண்ட ஆக்கங்கள் சக்திக்குத் தேவையா ?

சமுத்திரனின் கட்டுரை ஒரு ' சொற் கதிர் ' எவ்வளவு வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என்பது ஒரு ? . விழிப்புணர்வு நோர்வேயில் பெண்கள் ஆகியன சற்று சிந்திக்கத் தூண்டின.

இன்னுமோர் குறை மற்றைய பல சஞ்சிகைகளைப் போல ஆக்கங்களின் பொறுப்பை ஆக்கியோர் மேலேயே சுமத்துவது. நானறிந்தவரையில் மனிதம் மட்டும்தான் அவ்வாறில்லை. இது சக்தியும் மற்றைய பத்திரிகைகள் போன்றதே என்ற நிலைப்பாட்டைக் காட்டுகிறது.

இப்படிக்கு

நட்புடன்

யா. மணிவண்ணன்

அன்புடன் சக்திக்கு ,

சக்தி வெளியிடுவதன் நோக்கம் என்ன ?

தற்போது வெளிவரும் சக்தியானது பெண்களுக்கான ஆக்கங்களை ஆங்காங்கே பிரசுரித்து விட்டு மீதி ஒற்றைகளை அரசியல் கட்டுரைகளால் --- சில சத்தே இல்லாதவை --- இட்டு நிரப்புகிறது. இதனால் ' சக்தி ' தான் என்ன நோக்கத்துடன் வெளிக் கொணரப்பட்டதோ அதை திருப்திகரமாக செய்யும் பணியலிருந்து சறுக்குகிறது. அத்தோடு ' சக்தி ' பெண்களுக்கான சஞ்சிகை என்பதையும் மறக்கிறச் செய்கினது. காலப்போக்கில் ' சக்தி ' பெண்களுக்கான சஞ்சிகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதே வாசகர்களுக்கு மறந்து போனாலும் ஆச்சரியமில்லை. அரசியல் கட்டுரைகள், அரசியல் விவாதங்கள் பிரசுரிக்கப்படுவதற்குத்தான் எத்தனையோ அரசியல் சஞ்சிகைகள் இருக்கின்றனவே.

இப்படிக்கு

ராஜினி

## காத்திருப்பு

காற்றடிக்க உதிர்ந்திடும்
இலைகளைப் போல்
நாட்காட்டியின் தாள்களும்
உதிர்ந்து உதிர்ந்து
மாதங்களைப் பிரசவிக்கின்றன.

ஓடி மறையும் முகில்களைப் போல்
மாதங்கள் நகர்கின்றன.

ஆனாலும் நண்பர்களே
நீங்கள் தான் இன்னமும்
வரவில்லை.

உங்களைப் பற்றிய
தகவல்கள் கூட
இதுவரையில் இல்லை.

உங்கள் நினைவுகள்
ஒன்றே
இன்று எங்களிடம்
எஞ்சியுள்ளன.

இலை நுனியில்
தொற்றிக் கொண்டிருக்கும்
பனித்துளியை போல்
எங்களிடம் நம்பிக்கையுண்டு

அந்தத் தைரியத்தில்
இங்கே நாங்கள்
காத்திருக்கிறோம்

**தாழம்பூ**

15. 11. 91



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழைப்பு

முற்றவெளியினூடாக

கடற்கரையிலிருந்து வீசும் காற்று. . .

அடுப்பின்

அருகே

நிற்கும் உன்னில்

அது

கவனம் எதையும்

எழுப்பவில்லை.

சூரியன் நகரெங்கும்

தாவித் திரிகிறான்.

முற்றத்தை நிறைக்கும் பூக்களின் மணம். . .

கடற்கரை உப்புக்காற்றை

முகர்ந்த

ஈரம் காய்ந்த புற்களின் வாசனை. .

அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன.

தூரத்தில் உறுமின குரல்கள் -

பெண்களின் கிளர்ச்சி ஊர்வலம் ஒன்று !

விபரம்

ஒரு செய்தியாகவே

உனக்குள்

வீதியை நெருக்கும்

கோஷங்களில்

உக்கிரம் சுடர்ந்தது.

உன்னைப் பற்றிய

அறிதலற்ற

உன்னை

அவை எதுவும் செய்யாது.

கறியின் உப்புச் சுவையால்

கிடைத்த திருப்தியற்ற முனகலும்

வேலைப் பழுவின்

நீண்ட பெருமூச்சும்

உன்னிடமிருந்து. . .

ஆனால் -

தெரிகிறதா . . பெண்ணே. . .

உன் வாசலைக் கடந்து

போய் கொண்டிருக்கிறது

உன் உரிமைகளை

மீட்பதற்கான

ஒரு ஊர்வலம் .

## கொற்றவை

www.tamilarangam.net

# நான் ஒரு பெண்

எனக்தெற்கு
இந்தப் போலி முகத்திரை ?
உயிரற்றுச் சுவாசிக்கவும்
உதட்டுச் சிரிப்புடன் வாழவும்
எனக்குப் பிடிக்கவில்லை.

பார்த்தும் பாராதிருக்க
நான் ஒன்றும் பைத்தியமில்லை.
நடக்க சக்தியிருந்த்
நடைபிணமாக
எனக்கொன்றும்
நடந்துவிடவில்லை.

எனக்கு வேண்டியவை -
உரத்த சுவாசங்கள்.
காற்றையும்
உலுக்கும் என் வார்த்தைகள்
கனவுகளைச் சுமக்காத கண்கள்
சூரியனை எட்டிப் பிடிக்க ஓடும்
என் கால்கள்.
என் நம்பிக்கை வானிற்கு
இவை போதும் !

என் விடுதலை வேட்கைக்கு
வேண்டாம் இந்தப் போலி முகமூடி.
பழைய வேதாந்தத் திரையை
கிழித்து வெளிவந்து
நிர்வாணமாய்
என்னை நானாகப் பார்க்கப்
பிரியப்படுகிறேன்.

அப்போது
காற்றும் என் குரலில் கிறங்கிப் போகும்.
சூரியனும் எனக்கு முன் இறங்கி வரும்.

ஆகர்ஷ்யா 1992



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸைந்தவி

சொந்த நாட்டிலிருந்து வெளியேறி மேற்கு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் பெண்கள் மத்தியில் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கருதி, முதற் கட்டமாக ஜேர்மனியில் வெவ்வேறுநகரங்களில் சிதறுண்டு வாழும் பெண்களை ஒன்றிணைக்கும் முகமாக 1990 ம் ஆண்டு ஜேர்மனியிலுள்ள ஹேர்ண நகரில் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் சந்திப்பின் ஏழாவது தொடர் 16. 05. 1992 அன்று முல்கைம் நகரில் நடைபெற்றது.

சுய அறிமுகத்துடன் ஆரம்பமாகிய அன்றைய சந்திப்பின் முதல் நிகழ்ச்சியான அம்பையின் " வீட்டின் மூலையில் ஓர் சமையலறை " என்ற சிறுகதை வாசிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து பின்வரும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன.

இக் கதையில் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஒரு வீட்டின் மூலையிலுள்ள சமையலறையில் நாளாந்தம் சமையலில் ஈடுபடும் அவ்வீட்டுப் பெண்களின் வாழ்க்கை முறையை சித்தரிக்கப்பட்டிருந்தாலும் பொதுவாக இந்தியா, இலங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்ற நாடுகளில் உள்ள பெண்களின் வாழ்க்கை முறை இதற்கு ஒத்ததாகவே இருக்கிறது.

கதையில் பிரயோகிக்கப்பட்ட சில சொற்பதங்களும், பாத்திரங்களும் விளங்குவதற்குக் கடினமாக இருக்கிறது.

அம்பை, சமையலறையில் நித்தம் நிகழும் சம்பவங்களைக் கொண்டும், அவர்களின் உரையாடல்களைக் கொண்டு கதையை அழகாக நகர்த்திச் செல்கிறார்.

இக்கதையில் வரும் மீனாட்சி பெண்களின் மனவுணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் பாத்திரமாக படைக்கப்பட்டிருக்கிறார்.

கதை ஒரு மத்திய தர வர்க்க குடும்பத்தைப் பிரதிபலிக்கிறது. அப்பெண்கள் படும் துன்பங்களுக்கு மத்தியிலும் வேலைக்காரி என்ற பதத்தைப் பிரயோகிப்பதும், அப் பெண் படும் வேதனைகளைப் பற்றி எந்தவிடத்திலும் குறிப்பிடப் படவில்லை.

உல்லாசப் பிரயாணம் செல்லும் வேளைகளிலும் பெண்கள் காலையில் கண்விழித்து சமையல் வேலைகளைக் கவனிப்பதும், அங்கு சென்றும் அதையே செய்வதும் யதார்த்தமாக நடைபெறும் நிகழ்வுகளே.

ஏனைய கதைகளில் போன்று இக் கதையில் பெண்கள் கீழ்தரமாக வர்ணிக்கப் படவில்லை. அவளது உடலிலுள்ள காயங்களைப் பற்றியும், அவளது அயராத உழைப்பினால் அவளது உடல் எவ்வாறு பாதிக்கப் பட்டு இருக்கிறது என்பதையும் காட்டும் வர்ணனைகளாகவே இருக்கின்றன.

கூட்டுக் குடும்பங்களின் பிரச்சனைகள் காட்டப் படுகின்றன.

மீனாட்சி பாத்திரம் புரட்சிக்காரியாகப் படைக்கப் பட்டாலும் அவளால் இவ் ஒடுக்கு முறைகளை உடைக்க முடியவில்லை.

ஒரு தனிமனிதரால் அடக்கு முறைகளை உடைக்க முடியாது. எனினும் அவள் துணிந்து கேள்வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேட்கிறாள். மற்றவர்களுக்கும் விளக்கமளிக்கிறாள்.

இக் கதை 10 வருடங்களுக்கு முன் வாசிக்கப்பட்டிருக்க வேண்டிய கதை. இப்போது இந்தியாவில் இத்தகைய ஒடுக்கு முறைகள் இல்லை. நான் 5 வருடங்கள் அங்கு வாழ்ந்தேன். இத்தகைய நிலைமைகள் இப்போது அங்கு இல்லை.

இந்தியாவிலுள்ள ஒடுக்கு முறைகளைப் பார்ப்பதற்கு 5 வருடங்கள் போதாது. நாம் 10 வருடங்கள் ஜேர்மனியில் வாழ்ந்தாலும் ஜேர்மன் பெண்களின் முழுமையான ஒடுக்கு முறைகளை பார்க்க முடியாது. இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலுள்ள பெண்களின் நிலையும் இதுதான்.

அதைத் தொடர்ந்து " ஜேர்மன் சமூகத்தில் பெண்கள் " என்ற நிகழ்ச்சி ஒரு ஜேர்மனியப் பெண்ணால் நடத்தப்பட்டது. 1890 ம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஜேர்மனிய சமூகத்திலுள்ள பெண்களின் நிலைமைகளும், பின் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் அவற்றின் செயற்பாடுகளும் வெவ்வேறு கால கட்டங்களாகப் பிரித்து உதாரணங்களுடன் விளக்கினார்.

ஆரம்பத்தில் அச் சமூகத்தில் பெண்களின் கல்வி வேலை என்பவை எவ்வாறு இருந்தன என்றும், படிப்படியாக அவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், பெண்களின் திருமணங்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்பட்டே நடை பெற்றன. சமையலறை உபகரணங்களின் அறிமுகம், அதனால் பெண்களின் ஒய்வு நேரம் அதிகரித்தமை, இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஆண்கள் இராணுவத்தில் கடமையாற்ற பணிக்கப் பட்ட போது, பெண்களுக்கு குடும்பத்தில் கிடைத்த ஆளுமை, தொழிற் துறையில் எங்கும் கடமையாற்றக் கூடிய வசதி, பொருளாதாரத்தை தனித்து கவனிக்கும் பொறுப்பு கிடைத்ததும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தத்தின் பின்பு ஆண்களின் மீள் வருகையினால் மீண்டும் பெண்கள் பழைய நிலைக்குத் தள்ளப் பட்டமை, காலப் போக்கில் பெண்களுக்கு ஓரளவேனும் கிடைத்த பொருளாதார சுதந்திரம், தொழில் படிக்கும் வாய்ப்பு, பட்டப்படிப்பிற்கான உரிமை, வாக்குரிமை கலாசார ரீதியாக வெளிப்படையான ஒடுக்கு முறைகள் இல்லாவிடினும், மறைமுகமாக ஒடுக்கு முறைகள் காணப் படுகின்றன. பெண்களுக்கு சமமான சம்பளமின்மை, சட்டங்களில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக நடத்தப்படாமை , 218 வது சட்டத்தின் கீழ் பெண்களின் சுயவிருப்பின்படி கருக்கலைப்பிற்குத் தடை என்பவை அவரின் கட்டுரையில் அடங்கியிருந்தன.

இவரின் கட்டுரை ஜேர்மன் பெண்கள் முழுச் சுதந்திரம் அடைந்து விட்டார்கள் என்ற பொதுவான கருத்தை மறுதலித்தது.

மதிய போசனத்தை அடுத்து " பெண்விடுதலைக்கு எதிரான திசை திருப்பல்கள் " என்ற நிகழ்ச்சியின் கீழ் கட்டுரை வாசிக்கப் பட்டது. அக் கட்டுரையில் பெண் விடுதலைக்கு எதிரான பிரச்சாரங்கள், நவீன உபகரணங்கள் அறிமுகத்தினாலும், ஆண்கள் செயற்கை முறையினால் பாலூட்டுவதாலும், பெண்களுக்கான சிகரெட் என்பவைகளால் பெண்களின் சுதந்திரம் கிடைத்து விட்டது என்ற முதலாளித்துவத்தின் திசை திருப்பல்களும், பெண்கள் ஒடுக்கப் பட்டால் தானே விடுதலை தேவை, மண் விடுதலைக்குப் பின் தான் பெண்விடுதலை போன்ற சாதாரண மட்டங்களில் வைக்கப்படும் திசைதிருப்பல் கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அதையடுத்து சர்வதேச பெண்கள் தினமும் Muttertag ( தாய்காக மே மாதத்தில் ஒரு நாள் ஒதுக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுவது வழக்கம்) மட்டும் தான் திசை திருப்பல்களே அன்றி இக் கட்டுரையில் குறிப்பிட்டவைகள் அல்ல என்ற கருத்து முன் வைக்கப்பட்டதிற்கு, Muttertag திசை திருப்பலாக இருப்பினும் பெண்கள் தங்கள் உரிமைகள் பற்றி பகிரங்கமாக பேச சர்வதேச பெண்கள் தினம் விளங்குகின்றதென்றும், பெண்விடுதலையை நோக்கிச் செல்கையில் பிழையான வழிகளில் இட்டுச் செல்வதையே திசை திருப்பல்கள் எனக் கூறப் படுகின்றது என்ற கருத்தும் முன் வைக்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியை அடுத்து " பெற்றோரும் பிள்ளைகளும் " என்ற நிகழ்ச்சியின் கீழ் வாசிக்கப்பட்ட கட்டுரையில் இங்கு அந்நியச் சூழலில் வளரும் குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர் காட்டும் அசிரத்தையும், பிள்ளைகளுக்கு தமிழ்மொழியை புகட்ட மறுத்தல் போன்றவை அலசப்பட்டிருந்தது. அதையொட்டி நடைபெற்ற கருத்துப் பரிமாறலில், ஐரோப்பிய நாடுகளில் பாடசாலைகளில் படிக்கும் சில பெண் குழந்தைகளை பெற்றோர் நீச்சல் வகுப்பிற்குப் போக விடாமல் தடுக்கின்றனர்.

இச் சம்பவங்கள் பிள்ளைகளுக்கு உளவியல் ரீதியான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்ற கருத்து முன்வைக்கப்பட்டதுடன், எமது சமூகங்களில் பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் வெவ்வேறு விதங்களிலேயே வளர்க்கப்படுவதால் சிறுவயதிலிருந்தே அவர்களுக்கு இவ் வித்தியாசம் புகட்டப் படுகிறது என்றும் " நான் மொழி பெயர்ப்பாளராக சில தமிழ் குடும்பங்களுடன் சென்றிருக்கிறேன். எல்லோரும் சமூக உதவி நிறுவனத்துடன் பணம் சம்பந்தமான விடயங்களுக்காக என்னை அழைத்துச் சென்றார்களே அன்றி ஒருவரேனும் பிள்ளைகளின் கல்வி

www.tamilarangam.net

சம்பந்தமாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லவில்லை " என ஒரு பெண் தெரிவித்தார்.

பலர் தங்கள் அநுபவங்களையும், தங்களுக்குத் தெரிந்த சம்பவங்களையும் தெரிவித்தனர்.

அடுத்த நிகழ்ச்சியாக நோர்வேயிலிருந்து வெளிவரும் பெண்கள் சஞ்சிகையான ' சக்தி ' மீதான பார்வை என்ற நிகழ்ச்சியில் ஒரு விமர்சனக் கட்டுரை வாசிக்கப்பட்டது. அக்கட்டுரையை வாசித்தவர் 'சக்தி ' மற்றைய சஞ்சிகைகளைப் போன்று பத்தோடு பதினொன்றாக வரும் சஞ்சிகையல்ல. அது ஒரு தரமான சஞ்சிகை. இடதுசாரிகளும், பிரபல்யமான அறிஞர்களும் அதில் கூடுதலாக எழுதுகிறார்கள் இதனாலேயே என் பார்வையை இச் சஞ்சிகை மேல் செலுத்தினேன் என ஆரம்பித்து ' கலாச்சாரங்கள் ' என்ற சிறுகதை மூலம் தமிழர்கள் இன்னும் கட்டிக் காக்கும் பிற்போக்குக் கலாச்சாரங்களை எதிர்த்ததுடன் , வேறும் சில பாரம்பரியங்களையும் நிராகரிக்கின்றது. மற்றும் 'சிமோன் தீ பூபாவேப் போல. . ' என்ற சிறந்த சிறுகதையும் வெளியிட்டது எனக் கூறியதுடன் பார்த்திபனின் ' 50 டொலர் பெண்ணே ' என்ற சிறுகதை எந்தவொரு விடயத்தையும் தெரிவிக்கவில்லை என்றும், தலையங்கத்தை போட்டுவிட்டு அதற்கேற்ப கதை எழுதி பக்கங்களை நிரப்புவதாகவும் தெரிவித்தார்.

மேலும் மற்றவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் கதையில் இருக்கும் விடயங்களைக் குறிப்பிடாமல் இவ்வாறு விமர்சிப்பது வெறுப்புக்குரியது எனவும் அக்கதையில் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து வாங்கும் பிள்ளைகள் எதிர் நோக்கும் பிரச்சனைகளும், முன்பு அறிமுகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லாத ஒருவருடன் வாழ வரும் பெண்ணின் மன உணர்வுகளும் சித்தரிக்கப்பட்டு இருக்கின்றதெனவும், ஆரம்பத்தில் ஆணா, பெண்ணா கதையைச் சொல்கிறார் என்ற குழப்பமும், ஒரு பெண்ணைப் பற்றிக் கூறும் போது ஒரு ஆண் பிரயோகிக்கும் சொற்பதங்கள் பாவிக்கப்பட்டிருந்தது என்கின்ற விமர்சனங்களும் வைக்கப்பட்டது.

'சக்தி' யில் பெண்களை விட ஆண் ஆக்கதார்களின் எழுத்துக்களே வெளியாகின்றன என்றும் இது ஒரு யதார்த்தமான பிரச்சனை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றும் ராஜேஸ்வரியின் 'கற்புடைய விபச்சாரி' என்ற சிறுகதை மூலம் கற்பென்று ஒன்று இருப்பதாக ஏற்றுக் கொள்ளப் படுகிறது என்ற விமர்சனமும் வைக்கப்பட்டது.

'சக்தி' பற்றிய பார்வை முழுமையாகச் செய்யப் படவில்லை. கட்டுரை தயாரித்து வந்தவர் சக்தியில் இடம் பெற்ற தனிக் கட்டுரைகளையும், மற்றைய ஆக்கங்களையும் ஆழமாக விமர்சித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இறுதியாக எதிர்கால ஆலோசனைகளில் இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பெண்கள் சந்திப்பு குரல் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

இதுவரை காலமும் நடை பெற்ற சந்திப்புக்களுடன் ஒப்பிடுகையில் இச் சந்திப்பில் கலந்து கொண்ட பெண்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது மட்டுமல்ல அதிகமானவர்கள் தங்கள் கருத்துக்களை மனந் திறந்து தெரிவித்தமை எதிர்கால நடவடிக்கைகளுக்கு நம்பிக்கை யூட்டுவதாக அமைந்தது.

www.tamilarangam.net

# கற்பு நெறியென்று சொல்ல வந்தால்

அநாமிகா

தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமாக வலியுறுத்தப்படும் ஒரு விடயம் கற்பாகும். தமிழ்க்காவியங்கள் பலவும் கற்பின் பெருமையைப் பாடுகின்றன. கற்புடைய பெண்கள் தெய்வீகத் தன்மை கொண்டவளாக சித்தரிக்கப்படுகிறாள். கற்பை இழந்தவள் உயிரை விடுவதே சரியானதெனக் காட்டப் படுகிறது. இன்று கூட எதிரியின் இராணுவத்தின் பாலியல் வன்முறைக்குள்ளான ஒரு பெண் அதனை வெளிப்படுத்தி நீதி தேட முடியாத நிலையே சமூகத்தில் நிலவுகிறது. இந்த அவமானம் தாங்காது தற்கொலை செய்து கொண்ட பெண்கள் பலருண்டு.

கற்பை இவ்வளவு தூரம் வலியுறுத்தும் எமது சமூகம் அதற்கு கொடுக்கும் காரணம் கற்பு என்பது ஒழுக்கநெறி என்பதாகும். ஒவ்வொரு சமூகமும் நிலைத்து நிற்க அது தனக்கென சில ஒழுக்க நெறிகளைக் கொண்டிருப்பது அவசியம் ஆதலால் தமிழ்ச் சமுதாயம் கற்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதாகும். தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைக்குரிய அம்சமாக வலியுறுத்தப்படும் 'கற்பு' பற்றி சற்று விரிவாக பார்ப்பது அவசியமானது.

**கற்பு என்றால் என்ன?**

எமது சமுதாயத்தில் கற்பு என்பதற்கு பலவிதமான வரையறைகள், விளக்கங்கள் நிலவுகின்றன. தமிழ்காவியங்களும் பலவித கற்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரையறைய முனைகின்றன. விரிவான அர்த்தத்தில் இதனைப் பார்க்க முனைந்தால் பல மிகைப்படுத்தல்கள், நடைமுறைச் சாத்தியமற்ற வரையறைகளைக் காணலாம். ' பிற ஆடவன் மனதில் புகாமை' கற்பு எனப் படுகிறது. கற்புள்ள பெண் ' பெய்யெனப் பெய்யும் மழை' எனப்படுகிறது. கற்புள்ள பெண் ' படிதாண்டா பத்தினி' எனப்படுகிறாள். இவ்வறாக பலவிதமான கண்ணோட்டத்தில் சமூகமானது சாரம்சத்தில் ஒரு பெண் தனது கணவன் தவிர்ந்த அந்நிய ஆடவர்களுடன் திருமணத்தின் முன்போ, பின்போ உடலுறவு கொள்ளாமைய 'கற்பு' என அர்த்தப்படுத்திக் கொள்வதாக புரிந்து கொள்ளலாம்.

கற்பை உயர்ந்த ஒழுக்க நெறியாகப் போற்றும் எமது சமூகம் இதனை பெண்ணிடம் மட்டும் வலியுறுத்துவது ஏன் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே. பெண்ணின் கற்பினை இவ்வளவு தூரம் திரும்பத் திரும்ப மிகைப்படுத்தப் பட்ட வடிவில் கூட வலியுறுத்தும் காவியங்கள் ஆணின் விடயத்தில் இதனையிட்டு அலட்டிக் கொள்ளாதது ஏன்? 'படிதாண்டா பத்தினியை ' எதிர்பார்க்கும் சமூகம் வேலிதாண்டா வேங்கையை உருவாக்கத் தவறுவதேன்? கற்பு என்பது ஒழுக்க நெறி எனப் புரிந்து கொள்ளப்பட்டால் அது முழுச் சமூகத்திற்கும் உரியதே அன்றி பெண்ணுக்கு மட்டும் உரியதல்ல. ஒழுக்க நெறி ஒவ்வொன்றும் ஆண் பெண் உறவு சம்பந்தப்பட்டதாக

இருக்கையில் பெண்ணிடம் கற்பை வலியுறுத்தி விட்டு ஆணை ' சுதந்திரமாக' விட்டு விட்டால் ஒழுக்க நெறியை சமூக அளவில் மட்டுமல்ல பெண் தன்னளவிலாவது கடைப் பிடிக்க முடியுமா? ஆணின் ஒவ்வொரு ஒழுக்க மீறலின் போது ஒரு பெண் பலியாகையில் பெண் விரும்பினாலும் கூட தனது ஒழுக்க நெறியைக் கையாள்வது சாத்தியமா? இது போன்ற கேள்விகள் தவிர்க்க முடியாததாகின்றன.

www.tamilarangam.net

மனைவியை துறந்து சென்ற கோவலனை பிரிந்து வாடும் கண்ணகியை ' கற்புக்கரசி' என்றும் மாதவியைக் கற்பிழந்தவள் என வாதிடும் காவியம் கோவலனை இந்த வரையறைக்குள் சேர்த்துப் பார்க்க தவறுவதேன்? சீதையை தீக்குளித்து தனது கற்பை நிரூபிக்கச் சொன்ன இராமன் தான் கூட மனைவியை நீண்ட நாள் பிரிந்து வாழ்ந்தவன் என்ற வகையில் தனது கற்பை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏழாதது ஏன்? தன் நோயுற்ற கணவனை விபச்சாரியிடம் சுமந்து சென்ற மனைவி கற்பிற்கு இலக்கணமாவது எப்படி ? இது போன்ற போற்றிப் புகழும், திரும்பத் திரும்ப வலியுறுத்தும் தமிழ் காவியங்களின் நோக்கம் என்ன?

'படிதாண்டா பத்தினி' என்ற வரையறையின் பின்னால் உள்ள நலன்கள் யாருடையவை என சற்று விரிவாக பார்ப்போம். நிலப் பிரபுத்துவ சமுதாயத்தில் ஒவ்வொரு உழைக்கும் பெண்ணும் வயலில் உழைத்தே தனது வாழ்க்கையை ஓட்ட வேண்டிய நிலை நிலவியது. நிலப்பிரபுத்துவப் பெண்கள் மட்டுமே உழைப்பிற்காக வீட்டிற்கு வெளியில் போக வேண்டிய தேவை இருக்க வில்லை. அப்படியானால் ஆளும் வர்க்கப் பெண்கள் மட்டுமே பத்தினிகள். ஏனைய உழைக்கும் பெண்கள் அனைவரும் ஒழுக்க மற்றவர்கள் என்று இது கூற முனைகிறதா? ஆணாதிக்க சமுதாயமானது வீட்டுவேலை, சமூக வேலை என்ற பிரிவினையை ஏற்படுத்தி உற்பத்தி மற்றும் சமூக அரசியல், நிர்வாக வேலைகளை ஆண்களின் கைகளில் ஒப்படைத்து விட்டு பெண்களை சலிப்பூட்டும் விதத்தில் அமைந்த, உழைப்பாக மதிக்கப் படாத வீட்டுவேலைகள், பிள்ளை வளர்ப்பு போன்றவற்றை ஒப்படைத்து விட்டு அவளை வீட்டிற்குள் பூட்டி வைத்து விட்டது.

சமயலறையே அவளது உலகம் என ஆக்கி விட்டது. ' அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்று பெண்கள் கலல்வி கற்று விழிப்புணர்வு பெறுவதோ, வெளிவேலைகளில் சம்பந்தப்பட்டு பொருளாதார ரீதியில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக நிறுவனங்களின் அளவிலோ சற்று பலம் பெறுவதற்கு கிடைக்கும் அற்ப வாய்ப்புக்களையும் இவை தடுக்க முயலவில்லையா? மொத்தத்தில் இது ஆணாதிக்க ஆளும் வர்க்க நலன்களைப் பிரதிபலிக்கும் வரையறைதானே. ஆனால் இதனைத்தானே இன்றுவரை தமிழ்ச் சமூகம் முழுவதற்குமான வரையறையாக காட்ட முயல்கிறார்கள். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்பதன் அடிப்படையில் பார்த்தால் சமுதாயமானது ஒவ்வொரு பெண்ணையும் ஒழுக்கமற்றவளாகத் தானே கருத வேண்டும். இது போன்ற கருத்துக்கள் சமுதாயத்தில் பெண்களை அன்றாடம் இழிவுபடுத்தி வரும் நிலையில் சமூக அளவிலே பெண்களைப் பற்றிய தாழ்வான மதிப்பீடு தானே நில முடியும். ஒரு பெண் இந்த வரையறைகளை ஏற்றுக் கொண்டால் அவள் தன்னையிட்டு அவமானப்படுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? இப்படிப் பட்ட நிலையில் அவள் தனது உரிமைகளை யிட்டு விழிப்புணர்வு பெறுவதும் அவற்றிக்காக போராடுவதும் சாத்தியப் படுமா? அப்படியானால் சமுதாயத்தில் உள்ள மோசமான பெண்ணடிமைத்தனத்தை காக்கும் வேலையைத் தானே இந்தக் கருத்துக்கள் செய்து வருகின்றன.

ஆணின் பாலியல் வன்முறைக்கு பலியான ஒரு பெண் 'கற்பழிக்கப்பட்டவள்' எனப்படுகிறாள். 'கற்பை' அழித்தவன் தனது 'ஆண்மையை' நிரூபித்த திருப்தியுடன் இருக்கையில் பலியாகிப்போன ஒரு பெண் இன்னும் இன்னும் இந்த ஆணாதிக்க சமுதாயத்தால் அவமானப்படுத்தப் படுகிறாள். அப்படியாயின் கற்பு என்பது யாருடைய மதிப்பீடு. இங்கு கற்பு என்பது பெண்ணை அடக்க, ஆணாதிக்க சமுதாயத்திற்கு துணை போவதைத்தானே காண்கிறோம்.

காவியங்கள் எதுவும் காதலைப் பாடத் தவறுவதில்லை. காதலைப் போற்றும்

www.tamilarangam.net

காவியங்களை புனிதமானவையாகக் கருதும் தமிழ்ச் சமூகம் நடைமுறையில் காதலை, அத்தனை ஆரோக்கியமாக பார்ப்பதில்லை. அதிலும் காதலனால் ஏமாற்றப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட பெண்ணோ இன்றைய சமுதாயத்தில் இன்னொரு திருமணம் செய்து கொள்வது என்பது அத்தனை இலகுவானதல்ல. ஆனால் பல பெண்கள் காதலித்து கைவிட்ட ஒரு ஆண் எந்த வித பிரச்சனையும் இன்றி திருமணச் சந்தையில் நல்ல விலைக்கு க்குப் போகிறான். இப்படிப்பட்ட நிலையில் ஒரு பெண் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்தவோ, ஒருவனை காதலிப்பதே மிகவும் ஆபத்தான காரியமாகிறது. அப்படித்தான் காதலில் சிக்கி விட்டாலும் அவள் மீளவே முடியாது. தன்னால் காதலிக்கப்படும் ஆண் தனக்கு பொருத்தமானவனல்ல எனக் கண்டு கொண்டாலும் கூட ஒரு பெண்ணால் அவனை விட்டு விட முடிவதில்லை. ஏனெனில் அதன் பின்பு அவளுக்கு அநேகமாக திருமணம் நடப்பது என்பது சாத்தியப் படமாட்டாது

இந்த நிலையில் காதலில் சிக்கிய பெண் மீளவே முடியாது ' கல்லானாலும் காதலன்' என்ற நிலைதான் ஏற்படுகிறது.

ஆணும் பெண்ணும் தமது துணைவர்களை தமது இரசனைக்கும், விருப்பு வெறுப்புக்களுக்கும் ஏற்ப தாமே சுதந்திரமாக தேர்ந்தெடுக்கும் உரிமை என்ற வகையில் காதலானது முற்போக்கானது. காதல் திருமணங்கள் சமூகத்தில் நடமுறையில் இருந்து வரும் சாதிய, சமய, அந்தஸ்து, பொருளாதாரம் தொடர்பாக இருந்து வரும் மதிப்பீடுகளை மீற உதவும். முன்பின் அறியாத இருவரை வெறும் பொருளாதார காரணங்களுக்காக இணைத்து விடும்
பெற்றோர் ஒழுங்கு செய்யும் திருமணத்தை விட ஒருவர் தன் சொந்த விருப்பத்தில் சுயமாக தனது துணையைத் தேர்ந்தெடுப்பது என்பது முற்போக்கானது. ஆனால் இப்படிப்பட்ட முற் போக்கான அம்சங்கள் கூட ஒழுக்க நெறி தொடர்பாக பெண்கள் மீது காட்டப்படும் பாரபட்சம் காரணமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்ணைப் பொறுத்தவரையில் காதலிப்பது ஆபத்ததானதாகிறது. இந்த ஆபத்தை எதிர் கொள்ள தயாரான பெண்கள் மட்டுமே துணிச்சலுடன் காதலிக்க முடிகிறது.

ஒழுக்க நெறிகள் பற்றிய சமுதாய கருத்துக்கள் இப்படி பார பட்ச மானவையாக இருக்கும் வரையில் காவியங்கள் காதலை எத்தனை தான் உயர்வாக போற்றினாலும் அது நடை முறையில் அந்த சமூகத்திற்கு பொருந்தாது. இது மட்டுமல்ல விவாகரத்து உரிமை போன்று ஜனநாயக உரிமைகள் கூட பெண்கள் தொடர்பான ஒழுக்க நெறிகளில் காட்டப்படும் பாரபட்சம் காரணமாக பெண்களால் பயன்படுத்தப்பட முடியாததாகி விடுகிறது என்பதே உண்மையாகும்.

ஒழுக்க நெறி எனும் பெயரில் கற்பு என்பதை பெண்களுக்கு மட்டும் வலியுறுத்துவதன் மூலம் சமூகத்தில் நிலவும் பெண்ணடிமைத் தனம் பாதுகாக்கப் படுவதைக் காண்கிறோம். கற்பு என்பதால் ஆண் பெண்களுக்கிடையில் காட்டப்படும் இரட்டை மதிப்பீட்டின் மூலம் ஒழுக்க நெறி என்பதன் பெயரால் பெண்ணடிமைத்தனம் பாதுகாக்கப் படுகிறது என்பதே உண்மையாகும். ஒழுக்க நெறிகள் என்பவவை புனிதமானவை. கடவுளால் வழங்கப்பட்டவை. எல்லா மக்களுக்கும் எக் காலத்திற்கும் மான து என்றென்றும் நிலைத்து இருப்பவை என்று எமது சமூகத்தில் பொதுவாக கருதப் படுகிறது. கலாச்சாரங்கள், மரபுகள், சாத்திரங்கள் போன்றனவற்றை கடைப் பிடிக்கும் கடப்பாட்டை பெண்களிடமே விட்டுவிடுவது போன்று ஒழுக்க நெறியை பெண்களுக்குரியதாக விட்டு விடுகிறது எமது சமூகம். ஒழுக்க நெறிகள் என்பவை சமூகத்தின் உருவாக்கமாகும். ஒரு சமூகம் தனது வளர்ச்சி நிலைக்கு ஏற்ப தனது அன்றாட இயக்கத்தை சீராகப் பேணிவர சில விதிமுறைகளை

www.tamilarangam.net

தனிநபர்களது ஒழுக்க நெறியாகப் பிரகடனப் படுத்துகிறது. இவையே ஒழுக்க நெறிகளாகின்றன. சமூகம் தொடர்ந்து வளர்ந்து செல்கையில் முன்பு உருவாக்கப்பட்ட சில ஒழுக்க நெறிகளை மாறி விட்ட சமூக நிலைமைகளுக்கு ஏற்ப பொருந்தி வராத நிலையில், நடப்பில் இருக்கும் சமூக நிலைமைகளுக்கு தகுந்த விதத்தில் புதிய ஒழுக்க நெறிகளை உருவாக்கு கின்றன. ஒருவிதத்தில் இந்த ஒழுக்க நெறிகளை பிரதான வீதியில் உள்ள போக்குவரத்து சைகைகளுடன் ஒப்பிடலாம்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நகரில் சன நெருக்கடி , வாகனப் போக்குவரத்து நிலைமைகளுக்கு ஏற்ப பிரதான வீதியில் சமிஞ்சை முறை தீர்மானிக்கப் படுகிறது. ஆனால் சிலகாலம் சென்ற பின் அந்த நகரில் ஏற்படும் சனநெருக்கம், வாகனப் போக்குவரத்து நிலைமையில் மாற்றங்களுக்குப் பின்பு பழைய போக்குவரத்து சமிஞ்சைகள் பொருந்தாததனால் மாறி விடுகின்றன. இதற்கு மேல் வாகனப் போக்கு வரத்து சீராக இயங்குவதற்கு புதிய சமிஞ்சைகள் அவசியமானவை. இது போன்றே சமூக வளர்ச்சி நிலைக்கு ஏற்ப சமூக ஒழுக்க நெறிகள் கூட மாறி வருகின்றன.

மனிதகுல வரலாற்றில் சமுதாயத்தின் உற்பத்தி நிலைமைகளின் வளர்ச்சியுடன் கூடவே பலவிதமான ஒழுக்க நெறிகள் தோன்றி மறைந்து போகின்றன. புராதன கம்யூனிச சமுதாயத்தில் உற்பத்தி நிலைமைகள் மிகவும் கீழ்ப்பட்டவையாக இருந்தன. வேட்டையாடுவதற்கும் ஏனைய மிருகங்களிலிருந்து பாதுகாப்பதற்கும் சமுதாய அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது என்பது மிகவும் முக்கிய அம்சமாக இருந்தது. பாலுறவுகள் மிகவும் சுதந்திரமானவையாக இருந்தன. பின்பு தனிச் சொத்துடமை வந்த போது ஆண்கள் தமது வாரிசுகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனங் கண்டு கொள்ள வசதியாக ஒரு தார மணத்தை வலியுறுத்துகிறார்கள். இத்துடன் சுதந்திர பாலுறவுகள் முடிவிற்கு வந்து ஒரு தார மணம் என்பது சமூக ஒழுக்க நெறியானது. ஆனால் ஆணாதிக்கம் தலையெடுத்து வரும் நிலையில் இந்த ஒரு தார மணம் என்பது ஆரம்ப ஒழுக்க நெறியையே பெண்ணுக்குரியதாகவும் ஆணை திட்டவட்டமாக கட்டுப் படுத்துவதாகவும் இருந்தது.

பின்பு மக்கள் எண்ணிக்கை பெருக பல்வேறு கணக் குழுக்கள் ஒரே காட்டில் தனித்தனியாக வசிக்கும் நிலைமை உருவானதும் வேட்டையாடும் காட்டின் எல்லைகள் மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் கணக் குழுக்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதைத் தடுத்து சுமுகமான உறவைப் பேணும் வகையில் கணக் குழுக்களுக்கிடையே பெண்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் சுமுகமான உறவுகள் பேணப் பட்டன.

இப்படியாக ஒரு கணக் குழுவின் பெண், இன்னோர் கணக் குழுவிற்கு கொடுக்கப் படும் நிலைமை தோன்றிய போது அக மணத்தடை எனும் ஒழுக்க நெறி ஏற்படுகிறது. இவை இன்று வரை சகோதரர்களிடையே நெருங்கிய உறவின் தடையாக பாலுறவுத் தடையானது நிலைத்து வருகிறது.

முதலாளித்துவம் வளர்வதற்கு முன்பு நிலவிய சிறுபண்ட உற்பத்தி நிலையில் உற்பத்தி என்பது குடும்ப அளவில் நடை பெற்றது. ஒரு குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பெற்றோருடன் கூடவே பிள்ளைகளும் ஒன்றாகச் சேர்ந்து நிலத்திலோ அல்லது நெசவிலோ வேலை செய்தார்கள். இந்த நிலையில் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனி உற்பத்தி அலகுகளாக ஒருவித தனிமைப் பட்ட ஆரவாரமோ, எழுச்சியோ, போராட்டங்களோ இல்லாத நிலையில் வாழ்ந்தார்கள். மக்கள் கிராமத்த தலைவனுக்கும் மதத்திற்கும் கட்டுப் பட்டவர்களாகவே

www.tamilarangam.net

இருந்தார்கள். பிள்ளைகள் பெற்றோரின் கண்காணிப்பிலேயே வளர்ந்தார்கள். பருவ வயதை எய்தியதும் திருமணம் பெற்றோரால் செய்து வைக்கப்பட்டது. இங்கு பாலுறவு ஒழுக்க மீறல்கள் பெருமளவில் காணப்படவே இல்லை. முதலாளித்துவத்தின் வருகையுடன் பாரிய தொழிற்சாலைள் தோன்றிய போது உற்பத்தி அலகாக குடும்பம் இருந்த நிலைமாறி தொழிற்சாலைகள் உற்பத்தி அலகானது. நகரங்களில் இருந்த தொழிற்சாலைகளை நோக்கி பெருமளவில் முன்னால் குடிபெயர்ந்த சிறுபண்ட உற்பத்தியாளர்கள் குடிபெயர்ந்த தொழிலாளர்கள் ஆனார்கள். புதிய இயந்திரங்கள் ஆணின் உழைப்பைக் கட்டாயப் படுத்தவில்லை. பெண்களும் குழந்தைகளும் கூட தமது உழைப்புச் சக்தியை சந்தையில் விற்கும் வாய்ப்பைப் பெற்றார்கள். பெண்களும் குழந்தைகளும் உழைப்பில் ஈடுபடத் தொடங்கி பொருளாதார ரீதியில் பலம் பெறத் தொடங்கியதானது தந்தையின் அதிகாரத்தை மட்டுப் படுத்தத் தொடங்கியது.

சிறுபண்ட உற்பத்தியாளர்களது பாரம்பரியமாகப் பேணி வந்த குடும்ப அமைப்பின் இறுக்கமானது தளரத் தொடங்கியது. இத்துடன் கூடவே நகரத்தை நோக்கி குடிபெயர்ந்த தொழிலாளர்களது குடியிருப்புப் பிரச்சனைகளும் சேர்ந்து கொண்டன. பல சந்தர்ப்பங்களில் ஒரே அறையில் பல குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், வயது வந்தவர்கள் , சிறியவர்கள் போன்றோர் நெருக்கமாக வாழும் , உறங்கும் நிலைமைகள் தோன்றியது. இது அதுவரை பேணிவந்த பாலுறவு ஒழுக்க நெறிகளை மீற வழிவகுத்தது. இப்படியாக பழைய ஒழுக்க நெறிகளுக்குப் பதிலாக புதிய ஒழுக்க நெறிகள் முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் நடைமுறைக்கு வந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் உற்பத்தி நிலைமைகள் என்ற அடித்தள கட்டுமானத்தின் மேல் அரசியல், சட்டம், மதம், ஒழுக்க நெறி போன்ற மேல்கட்டுமானங்கள் உருவாகியுள்ளன. குறிப்பிட்ட சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் இந்த கட்டுமானங்களை உருவாக்கினார்கள். இதனால் சமூக மேல் கட்டுமானங்கள் அச் சமுதாயத்தில் உள்ள ஆதிக்க சக்திகள், ஆளும் வர்க்கங்கள் ஆகியவற்றின் நலன்களைப் பேணுவவையாக இருப்பது தவிர்க்க முடியாததாகிறது.

காலகாலமாக தொடர்ந்து வரும் ஆணாதிக்கமானது வரலாற்றில் உருவான பலதரப்பட்ட சமூக அமைப்புக்களிலும் அவற்றின் மேற் கட்டுமானங்கள் ஆணாதிக்கத்தை தொடர்ந்தும் காக்கும் விதத்தில் இருப்பதை உத்தரவாதப் படுத்தி வந்துள்ளன. இதன் தொடர்ச்சியாய் இன்றைய சமுக அமைப்பில் சட்டம், பொருளாதாரம், மதம், பண்பாடு ஒழுக்க நெறிகள், மரபுகள். . . போன்ற ஒவ்வொன்றுமே பெண்ணடிமைத் தனத்தைக் காப்பனவாக உள்ளன. இந்தவகையில் எமது சமுதாயத்தில் நிலவும் ஒழுக்க நெறிகள் கூட ஆணாதிக்கத்தை காப்பனவாகவும் பெண்ணடிமைத்தனத்தை பலப்படுத்துவதாகவும் இருப்பது புரிந்து கொள்ளப்படத்தக்கதே.

முதலாளித்துவத்தின் தோற்றமானது உற்பத்தி சக்திகளை பெருமளவில் குவித்து வர்க்க அமைப்பை முடிவுக்கு கொண்டுவரக் கூடிய நிலைமைகளை தோற்றுவித்தது. பெருமளவில் இயந்திரங்களை கொண்டு வந்து ஆண்-- பெண் வேலைப்பிரிவினை என்ற வரலாற்று நிலைமைக்கு முடிவு கட்டத் தொடங்கியது. இதன்விளைவே பெண் விடுதலை அமைப்புகள் தோற்றம் பெறலாயின. பெண்ணிலைவாதமானது இன்றைய சமூக அமைப்பில் பெண்ணடிமைதனத்தை

www.tamilarangam.net

பாதுகாக்கும் வகையில் செயற்படும் ஒவ்வொரு துறையையும் அம்பலப் படுத்தும் புதிய மதிப்பீடுகளை உருவாக்க முனைவதும் தவிர்க்க முடியாததாகும்.

எமது சமூக அமைப்பிலும் முதலாளித்துவம் பலமாக வளராததும் முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறைகள் இன்னும் பலம் பெற்று விளங்குவதும் எமது சமூகத்தில் இன்று நிலவும் சமூக மதிப்பீடுகளின் குறிப்பான தன்மைக்கு காரணமாகும். எமது சமூக அமைப்பு , குடும்ப உறவுகள், சமூக மதிப்பீடுகள் பலவகையிலும் முதலாளித்துவத்திற்கு முந்திய சமூகத்தின் அம்சங்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கற்பு போன்ற ஒழுக்க நெறிகள் பற்றிய மதிப்பீடுகளும் தமிழ் சமுதாயத்தில் குறிப்பான அம்சம் என்பதிலும் பார்க்க முதலாளித்துவ உறவுகள் பலம் பெறாத ஒரு சமூகத்திற்கு பொதுவான தன்மை எனக் குறிப்பிடுவதே பொருத்தமானதாகும் .

தமிழ் சமூகத்தின் ஒழுக்க நெறிகளுக்கும், மேலைதேய ஒழுக்க நெறிகளுக்கும் இடையிலுள்ளுள வேறுபாடுகளை இந்த நாடுகளுக்கிடையிலான தேசிய, கலாசார தனித்துவமான அம்சங்களுக்கிடையிலான வேறுபாடாக சித்தரிப்பதிலும் பார்க்க முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி உறவுகளையும் வளர்ந்து விட்ட முதலாளித்துல உற்பத்தி உறவுகளையும் கொண்டுள்ள இரண்டு சமுதாயத்தின் மதிப்பீடுகளில் உள்ள வேறுபாடாக இனங்காண்பதே சரியானதாகும்.

ஒருதார மணம் என்பது வரலாற்றில் ஒரு முற்போக்கான படியே. ஆனால் கூடவே இது பெண்களுக்கு மட்டுமானதாக வலியுறுத்தப் படுகையில்தான் இது

www.tamilarangam.net

ஆணாதிக்கத்திற்கு சேவை செய்வதாககிறது. ஆகவே எவ்வளவுதான் முற்பாக்கானதாக ஒரு ஒழுக்க நெறி இருப்பினும் கூட அது ஆண் -- பெண் சமத்துவத்தை வலியுறுத்தத் தவறுகையில் அது பெண்ணடிமைத்தனத்தை காப்பாற்றுவதாகவும் மொத்தத்தில் சமுதாய ஒழுக்க நெறியாக உண்மையாகத் தொழிற்பட முடியாததாக ஆகிவிடுகிறது.

இப்போது நேரடியாக விடயத்திற்கு வருவோம் . பெண்ணிலைவாதிகள் ஒழுக்க நெறிகளை நிராகரிக்கிறார்களா ?

இல்லை. ஒழுக்க நெறிகள் என்பதை பெண்களுக்கு மட்டுமானதாக , பெண்களைக் கட்டுப் படுத்துவதாக , அடக்குமுறை சாதனமாக பயன் படுத்துவதையே எதிர்க்கிறார்கள். பெண்ணிலைவாதிகளைப் பொறுத்த வரையில் அவர்களது முதன்மையான அக்கறைக்குரிய விடயம் ஆண் -- பெண் சமத்துவமேயாகும். ஒழுக்க நெறி என்பது முழுச் சமூகமும் சம்பந்தப்பட்ட விடயமாகும். அதனை பெண்கள் முழுச் சமூகத்துடன் இணைந்து தீர்மானிக்கலாம். ஆனால் ஆண் -- பெண் சமத்துவத்திற்கான போராட்டம் என்பது பெண்களால் முன்னெடுக்கப் படாவிட்டால் வேறுயாருமே பெண்விடுதலையை வழங்கி விடப்போவதில்லை என்பதால் அவர்கள் முழுமையான அக்கறைக்குரிய விடயமாகிறது.

ஒரு சமூகம் தனது ஒழுக்க நெறிகள் பற்றி உண்மையிலேயே அக்கறையுடையதாக இருக்குமாயின் அது தனது ஒழுக்க நெறிகளை ஆண் -- பெண் சமத்துவ அடிப்படையில் பெண்களின் பங்குபற்றுதலுடன் ஆண்களையும் கட்டுப்படுத்தக் கூடியதாக தனது ஒழுக்க நெறிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே நியாயமான நடைமுறை சாத்தியமான

www.tamilarangam.net

ஒழுக்க நெறிகள் உருவாக முடியும். பெண்ணுக்கு ஒழுக்க நெறியிலும் சமத்துவம் இருக்கும் போது மட்டுமே அதாவது ஒழுக்க நெறிகளை ஆண் மீற முனைந்தால் பெண்ணும் கூட அவற்றை மீறலாம் எனும் நிலைமை தோன்றும் போதுதான் ஆண்கள் ஒழுக்க நெறிகளை கடைப் பிடிப்பதற்கு உணர்வு பூர்வமாக முன் வருவார்கள். ஆண்களும் கட்டுப்படும் நிலைமை ஏற்பட்டால் மட்டுமே சமுக அளவில் கூட ஒழுக்க நெறியைப் பேண முடியும். ஆண்களையும் சமுக நெறிகள் சமத்துவமாகக் கட்டுப் படுத்தும் எனும் நிலைமை தோன்றினால் மட்டுமே உருவாக்கப்படும் ஒழுக்க நெறிகள் யதார்த்தமானவையாக நடைமுறை சாத்தியமானவையாக இருக்க வேண்டும் என்பதில் ஆண்களும் அக்கறை செலுத்துவார்கள்.

அப்போதுதான் சமுகத்தில் நியாயமான நடைமுறை சாத்தியமான ஒழுக்க நெறிகள் இருக்க முடியும். இதுவொன்றே சமுக வளர்ச்சிக்கு பொருத்தமான அனைவராலும் கடைப் பிடிக்க கூடிய ஒழுக்க நெறிகளை உருவாக்ககுவதற்கான ஒரே வழியாகும்.

இன்று நாம் வாழும் சமூகமானது ஒரு ஆணாதிக்க சமுதாயம் என்ற வகையில் சமூகத்தில் நடைமுறையிலுள்ள சட்டம், மதம், கல்வி, கலாச்சாரம், சடங்குகள், சம்பிரதாயங்கள் ஒழுக்க நெறிகள் போன்ற ஒவ்வொரு துறையிலும் ஆணாதிக்க நலன்கள் ஊடுருவி இருப்பதைக் கண்டறிந்து அவற்றிற்கு எதிராக போராட பெண்கள் முன்வர வேண்டும்.

இப்படியாக சமுதாயத்தில் ஒவ்வொரு துறையிலும் ஆண் -- பெண் சமத்துவம் நிலை நாட்டப் படும் போதுதான் சமூகத்திற்கு உண்மையிலேயே தேவைப்படும் நியாயமான நடை முறை சாத்தியமான சட்டம், கலாச்சாரம் மரபுகள் ஒழுக்க நெறிகள் உருவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியும். இதற்கு மாறாக இவற்றில் ஊடுருவியுள்ள ஆணாதிக்க கண்ணோட்டங்களை மறைத்துவிட்டு ஒழுக்க நெறிகளை மட்டும் வலியுறுத்துபவர்கள் ஆணாதிக்கத்தை பலப்படுத்தும் வேலையையே செய்கிறார்கள்.

கட்டுரையாசிரியர் குறிப்பிட்டது போல கற்பு என்பது தனியே தமிழ் பெண்களுக்கு மட்டுமான பிரச்சனையல்ல. பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் பிரச்சனைக்குரியதாகவே இன்றுவரை இருந்து வருகிறது.

இலங்கை குடும்ப கட்டுப்பாட்டு சபையினால் மேற்கொள்ளப்பட்ட " இலங்கை இளைஞர்களின் உடல்நல விழிப்புணர்வு பற்றிய புணர் உருவாக்க கல்வி " சம்பந்தமாக டாக்டர் சிறி யானி பசநாயக்கா ( வைத்திய அத்யட்சகர், இலங்கைக் குடும்பக் கட்டுப்பாட்டு சபை ) அவர்களினால் எழுதப்பட்ட இலங்கை மணப் பெண்களின் பயங்கர கனவுகள் என்ற தலைப்பின்கீழ் THE ISLAND இல் வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளை மிகவும் நன்றியுடன் பிரசுரிக்கிறோம்.

பாலியல் உறவு பற்றிய மட்டரக அறிவுதரம், கன்னித்தன்மை பற்றிய இளைஞர்களின் மனப்பான்மை போன்றன இந்நாட்டின் பெரும்பாலான மணப் பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக இல்லை.

எமது ஆய்வில் விசாரிக்கப்பட்ட ஆண்களில் 76 % கன்னித்தன்மையுள்ள பெண்களையே திருமணம் செய்வதில் குறியாக இருந்தாலும் அவர்களில் யாருமே தம்மில் எத்தனைபேர், திருமணத்தின் போது அத்தகைய பரிசோதனைக்கு ஒருவேளை தாமும் உட்பட நேர்ந்தால் அதில் சித்தி அடைய முடியும் என தம்மைக் கேட்காமல் இருப்பது வியப்புக்குரியதே.

www.tamilarangam.net

இந்தக் கன்னித்தன்மை பற்றிய சில முக்கியமான அவதானிப்புக்களாவன.

1. இலங்கையர் திருமணங்களில் கன்னிப் பரிசோதனை ஓர் முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

2. இச் சோதனையில் சித்தியடையாதவர்களும், இதை முகம் கொடுக்க அஞ்சுபவர்களுமாகப் பல பெண்கள் அநாவசியமாக வீணே வருந்துகிறார்கள்.

3. மரபு வழி " கன்னிப் பரிசோதனை " விஞ்ஞான ரீதியற்றதும், நம்பந்தகுந்ததும் அல்ல.

4. இலங்கையிலுள்ள இளம் ஆண்களில் பெரும்பாலானவர்கள் கன்னிப் பெண்களையே திருமணம் செய்ய விரும்புகிறார்கள்.

மரபுவழி பரிசோதனையில் தோல்வியுறும் கன்னிப் பெண்களுக்கு எந்த ஒரு பாதுகாப்போ அல்லது பரிகாரமோ இல்லாதிருக்கிறது.

எமது கலாச்சாரத்தில் திருமண நாள் வரைக்கும் கன்னத்தன்மையை பாதுகாத்து தைத்திருப்பது ஒரு மரபாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. நாம் நியாயமற்ற விஞ்ஞான ரீதியற்ற நடைமுறைக்கு கூடாக தமது கற்பினை நிரூபித்து காட்ட வேண்டு என்பதற்கு எதிராகவும், அதில் தோல்வியுறும் மணப் பெண்கள் அடையும் அவமானங்களுக்கு எதிராகவும் போராட வேண்டும்.

[redacted]

கலை இலக்கிய சமுக விஞ்ஞானம் சார்ந்த ஆக்கங்களை சக்தி உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறாள். ஆக்கங்கள் சிறுகதைகளாகவோ தொடர் கதைகளாகவோ கவிதைகளாகவோ கட்டுரைகளாகவோ அமையலாம்

ஆண்டுச் சந்தா விபரம்

ஸ்கண்டிநேவியா : NKr 100

ஏனைய நாடுகள் : U$ 20

இலங்கை : இலவசம்

தபாற்கணக்கிலக்கம் : 0824 038 3676

SAKTI , BOKS 99 OPPSAL

0619 OSLO 6

NORWAY.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு மானுடத்தின் குரல்

ஆர்த்தி

முந்திமாதிரி இப்பவும் நான் துள்ளித் திரிய வேணும் போல கிடக்கு. லோகன் அண்ணான்ர பெரிய ஏசியாச் சைக்கிள்ள பாருக்குக் கீழால காலப் போட்டு, ஒழுங்கையெல்லாம் சுத்தி வர வேணும் போல இருக்கு. மாமரத்தில ஏற வேணும், உயரமா ஊஞ்சலக் கட்டி வேகமாக ஆடவேணும் போலயெல்லாம் இருக்கு.

அருந்ததி, மாலா, வாணி, சேந்தன் குமரன் கோமளா இவங்களையெல்லாம் கூப்பிட்டு, முந்தி மாதிரி எட்டுக் கோடு கப்பல் கோடு நிறைய விளையாட வேணும் எண்டெல்லாம் ஆசையாக் கிடக்குது. ஒருகாலமும் இல்லாத கட்டுப்பாடுகள அம்மாவும், ஆச்சியும் அடுக்கிக் கொண்டே போகினம்.

நான் முந்திப் போல கண்டபடி திரியக் கூடாதாம். பெடியளோட கதைக்க கூடாதாம். பொம்பிள சிரிச்சா போச்சு, போயில விரிச்சா போச்சு எண்டு சொல்லுகினம். முந்தி தாங்கள் எல்லாம் சரியான அடக்க ஒடுக்கமா இருந்தவையாம். அம்மாவும் ஆச்சியும் சொல்லுகினம் சிரிக்கக் கூடாதாம்.

கொஞ்சக் காலத்திற்கு முந்தி எவ்வளவு சுதந்திரமா திரிஞ்சனான். இப்ப வீட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடந்து, உடம்பில வெய்யில் படாம கடத்தால மூடின புல்லு மாதிரி வெளிறிப் போனன். அழுகிப் போன நொச்சிக்குழ மணக்கிறதப் போல வெளிச்சம் படாததால என்ர தேகம் மணக்கிற மணம் எனக்கே

www.tamilarangam.net

சகிக்கேலாம கிடக்கு. அருவருப்பாயிருக்கு.

ஊரையெல்லாம் கூட்டி, பண்டாரம், பரஞ்சோதியார் ரெண்டு பெரிய கிடாரம் வாடகைக் கெடுத்து, அவிச்சுக் கொட்டி, கோண்டாவில் லதா சவுண்ட் சேவிஸ் லவுட்ஸ் பீக்கர் பிடிச்சு,குறுக்குப் பந்தல் போட்டு, மணவற, சிகரமெல்லாம் வாடகைக்குப் பிடிச்சுக் கட்டி, சிவப்புக் கலரில காஞ்சிபுரம் எடுத்து, நெத்திப் பட்டம், ஒட்டியாணம், மூக்குத்தி இப்பிடி நிறைய நகையளால என்னையும் அலங்காரம் செய்து ( நான் படிக்கிற காலத்தில பென்சிலுக்கே காசு தர எங்கட வீட்டுக்காரர் பஞ்சப் பட்டினம் . . . . ) மீகல்காரனைக் கூப்பிட்டு ஜெனரேட்டர் வச்சு வீடியோப் படம் எடுத்து . . . . . கொண்டாட்டம் நாலு நாள் .

ரெண்டு கிடாரத்தில நாலு நாளும் விருந்தவிச்சு ஊரும் , உறவுகளும் சாப்பிட்ட போக மிஞ்சிப் போன ஒரு தொகை சோறுகறி வடக்கு வளவில அப்பரும், மாமாவுமா வெட்டித் தாட்டினம். அத நினைக்க வயித்தப் பத்தி எரிஞ்சது. வடக்கு வளவில வெட்டித்தாட்ட சோத்துக் குவியலோட என்ர சுதந்திரமும் புதைஞ்சு போட்டுதெண்டது கன நாளைக்குப் பிறகுதான் எனக்கு விளங்கிச்சுது.

உழவு மாடுடொன்று சந்தைக்கு தயாரெண்டது போல, இனப் பெருக்கத்திற்கு நானும் தயாராகி விட்டனெண்டு லவுட்ஸ் பீக்கரில ஊருக்ககெல்லாம் அறிவித்தல் குடுத்தாச்சு. இனி ஆராவதொரு அறிமுகமில்லாதவன் வருவான். என்னைப் பாத்துப் போட்டு, தனக்கு சம்மதமா இல்லையா எண்ட மட்டும் சொல்லுவான். என்ர சம்மதத்த யாருமே கேட்க மாட்டினம். வந்தவன் சம்மதித்தால் என்ர ஆத்மம், சாரீரம்

www.tamilarangam.net

எல்லாத்தையுமே திரும்பவும் ஊரைக் கூட்டி, லவுட் பீக்கர் பிடிச்சு, குறுக்குப் பந்தல், மணவறை, ஐயர், தாலி, கிடாரம் கிடாரமா சோறுகறி. . . . . இப்பிடியொரு நீண்ட பட்டியலுக்கு மத்தியில என்ர ஆசாபாசங்களையும் சேர்த்து தல குனிஞ்சபடியே என்ன நான் தாரை வார்க்க வேணுமாம். என்ர அம்மாவும் ஆச்சியும் ஏன். . . . இந்த ஊர் சனங்கள் அநேகமானதுகளும் இப்பிடித்தான் நடந்தினம்.இப்பவும் நடக்கினம். நானும் இப்பிடித்தான் நடக்க வேணும் எண்டு எதிர் பாக்கினம். மலிஞ்ச விலைக்குத் தட்டுப்படுற உள்ளூர் மாப்பிளயட்ட என்னை ஒப்படைக்க வேணும். அல்லது சமூக அந்தஸ்தை என்ர குடும்பம் எடுக்க வேணுமெண்டதுக்காக கொஞ்சம் கூடுதலான விலையில வெளிநாட்டு மாப்பிள தயாராகும். புறோக்கர் மூலமா என்ர போட்டோ ஏற்றுமதி சாம்பிளா அனுப்பி வைப்பினம். விலை ஒத்து வந்து வியாபாரம் ஓ. கே என்டால் நானும் வெங்காய மூடையப் போல ஏத்துமதியாவன்.

விட்டகுறை, தொட்ட குறை தொடர்ரது மாதிரி பிட்டுக்குழல், இ யப்ப உரல், இட்டலிச் சட்டி, அரிதட்டு, இடியப்பத்தட்டு, பிட்டுப் பானை. . . . இப்பிடி நிறையக் குசினிச் சமானுகள் பொதியா என்ே ாட ஏத்துமதியாகும். விறகடுப்பில யிருந்து, கரண்டடுப்புக்கு பதவி உயர்வு கிடைக்கும். 'அவர்ர' வாரிசப் பெருக்கிற முக்கிய உத்தியோகமும் கிடைக்கும். அதச் செவ்வனே செய்தனெடால் நான் தாய் இல்லையெண்டால் மலட்டு நாய். சீ. . . . . என்ன ஜென்மமடி நாங்க. . . . .? ? ?? ? ?

பாரம்பரியம், சம்பிரதாயம், சடங்கு, அடக்கம், பத்தினி, பொறுமைப் பெட்டகம், இரக்கத்தின் இருப்பிடம்,

www.tamilarangam.net

தியாகத்தின்ர உறைவிடம் இப்பிடி நிறைய பிரமிட் கல்லறையளக் கட்டி பெண்களயும், அதுகளட உணர்வுகளையும் சமாதியாக்கிற இந்த சமுதாயத்த நான் வெறுக்கிறன். நான் வாழவேணும், நான் வாழப் போறன். மானுடமாய் வாழப் போறன். 'பொம்பிளை' எண்டு என்னை பலவீனமா நினைச்சு அடக்கி ஒடுக்கிற இந்தச் சமுதாயத்துக்குள்ள இருந்து கொண்டே மானுடமா நான் வாழப் போகிறேன். நிச்சயமா ஒதுங்கி வாழ மாட்டன். இந்தச் சமுதாயத்துக்குள்ள இருந்து கொண்டே எதிர்ப்புக்களுக்கு முகம் குடுத்து வாழப் போறன். என்னப் புரிஞ்சு கொண்ட ஒருத்தன சந்திக்கிற வரைக்கும் தனியாக நான்.

## முகவரி இல்லாதவர்கள்

கருவில் உருவாகும் போதே
முகவரிகளை தொலைத்து விட்டவர்கள்
நாம்
அதனால் தானே
வளரும் போது
அப்பன் பெயரில் அடையாளம்
வளர்ந்த பின்பு கணவன் பெயரில் அடையாளம்

எங்கள் முகவரிகள்
என்றும்
இரவல் முகவரிகளே
தொலைத்தது எங்கள் முகவரிகளை மட்டுமல்ல
எம் சுயத்தையும் கூடவே.

**அநாமிகா.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனது காலை பற்றிய கவிதை

நிம்மதியைத் தொலைத்த இரவுகளினதும்
கலங்கித் தெளிந்த பகல்களினதும்
கலவையாய்
ஒரு நேரத்தைத்
தேர்ந்தெடுத்தேன்.
அது ஒரு அருமையான விடியல்.
உயிரோட்டமான காலை.
அது
அஸ்தமனமாயிற்று
விபரமறியா மனிதருக்கு.
காலை எனக்கு இதமானது
கூவுவன சேவல்கள்
பாடுவன பறவைகள்
என்னைச் சுய பிரக்ஞையடையச் செய்வன
அவை.
இந்தவகையில்
முக்கியமாயிற்று காலை.
இரவுகளில் என்னை
இறுக்கிய
முடிச்சுக்களை அறுத்தெறிவேன்.
கலவரந்தாங்கிய
கண்களைக் களைவேன்.
புதிய
சிந்தனையைத் தூண்டுகிற,
பாடல்களை இசைப்பேன்
விகாரமிகு பார்வைகளை
விலக்கி வைப்பபேன்
சிநேகப் புன்னகைகளைச்
சேகரிப்பேன்.
தூரமாய் குரல்கள் என்னை
அதட்டும்
" பெண்ணே . . . பெண்ணே " என
கொடிய அக்குரல்களின்
இரக்கமற்ற கட்டளைகளை
அலட்சியப்படுத்துவேன்.
இது
அஸ்தமனம் என்பர்
அறியாத மூடர் ஆவர்.
நானோ
என்னை
விழித்தெழ வைக்கிற என் காலையைப் பற்றி
உரத்துப்பாடி இசைப்பேன்.

**கொற்றவை.**

13.05 92

www.tamilarangam.net

# காற்றிலேறி

கலைச்செல்வன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்து மணிக்கு வேலை.

அலாரம் எப்போதோ அடித்து, நிறுத்தி, பின் நித்திரையாகி, எல்லாம் பண்ணி இப்போதே நேரம் பத்து மணி. மனம், உடல் எல்லாம் பரபரத்தது. குசினி இன்றைக்கு 'பஸார்' மாதிரி இருக்கும்.

இது ஒன்றும் விளங்காமல் சுவரில் மொனாலிஸா. லியனாடோ டா வின்ஸி என்னைப் போல் ஒரு பத்திரனிடம் அகப்படவில்லைப் போல. பல்லு விளக்காமல் முகம் கழுவி, மேவின தலையைக் கையால் கோதிவிட்டு, பெனியன், சேட், ஜக்கெற் எல்லாவற்றையும் சேர்த்தபடி உடம்பில் கொழுவி, சூடு ஆறமாட்டேன் என்று கொதிச்சுக் கொட்டிய கோப்பியை இரண்டு மிடறில் வைத்து விட்டுப் பாய்ந்த போது மெட்ரோவுக்குள் நான். அல்லது எனக்குள் மெட்ரோ. பாம்பும் பழுதையும்.

காலியாக இருந்த சீற்றில் குந்தியபடி குனிந்து சப்பாத்து லேசைக் கட்டி நிமிர்ந்த போது ஒரு பொடுபொடுத்த கிழவி. நூறைத் தொட்டிருக்க வேண்டும். தவளைக்கால் கைகள். நடுக் கம்பியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இடுப்பை நிமிர்த்தியது.

'நீங்கள் இருங்கோ மேடம்' என்று பிரஞ்சில் சொன்னபடி இருக்கையை விட்டு எழுந்தேன். கிழவி நன்றி சொன்னாள். முறுவல் கொட்டினாள். உட்காரவில்லை. இந்த வயசிலும் எனக்கு ஒன்றும் கெட்டு விடவில்லை என்கிறாளா? இரக்கப்பட்டு ஏமாந்தேனா அல்லது கிழவியின் நெஞ்சுரத்தின் முன் உண்மையிலேயே குறுகிப் போனேனா என்று எனக்குள் தர்க்கித்துக் கொண்டிருக்க நேரமில்லை.

அடுத்த மெத்ரோ.

முன்னால் இருந்தவர் இறங்கிப் போக கிழவி அந்த சீற்றுக்கு நகர்ந்தாள். யூனிபோம் மடிப்புக்களை நலுங்காமல்

www.tamilarangam.net

ஒழுங்காக அணைத்துக் குந்தும் பள்ளிக்கூடப் பெண்களைப் போல, தனது ஸ்கேட் நலுங்காதபடி ஆறுதலாகக் குந்தினாள். முள் அழுகி சுருங்கிய அம்பலவி முகம். பழுத்துக் கருகும் பூவரசம் இலை மாதிரி தோல் செத்துப் புள்ளி நிரம்பியிருந்தது.

சின்ன வட்டக் கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்து சாயம் போட்டுச் சுருட்டிய முடியை படிய அழுத்தியது. சொண்டுக்குச் சாயத்தை மேலும் அழுத்தமாகத் தேய்த்தாள். கண்ணுக்கும் புருவத்திற்கும் இடைப்பட்ட பகுதிக்கு இன்னும் கொஞ்சம் ஊதாக்கலர் சேர்த்தாள்.
உண்மையிலேயே அந்த ஊதாக்கலர், கிழவியின் ஸ்கேட், மேல் சட்டை, கழுத்துமாலை, சொக்ஸ் எல்லாத்தோடும் நன்றாகவே பொருந்தியது.
கண்ணாடியை ' ஹேண்ட் பாக்' இனுள் வைத்து விட்டு ஆசுவாசமாகத் திருப்திப் பெருமூச்சு விட்டாள்.

தான் நல்ல அழகாக இருக்கிறேன் என்ற நம்பிக்கை கிழவியின் முகத்தில் ஒளிர்ந்தது. அழகான கிழவி தான். வாழ்க்கையில் எத்துணை நம்பிக்கை.

'ரெஸ்ரோறன்ற்' இல் நுழைந்த போது பத்ரோன் அப்போது தான் மணிக்கூட்டைப் பார்ப்பதாகக் காட்டிக் கொண்டான். 'சரிதான் போடா' என மனதினுள் புறுபுறுத்தபடி குசினிக்கட்டை நோக்கி நகர்ந்தேன்.

இரவுப் பாத்திரங்கள் தவமிருந்தன.
இனி 12 மணி ' சேவிஸ்' க்கு எல்லாத்தையும் ஆயத்தப் படுத்த வேண்டும்.
பாத்திரங்களை கொட்டுக்குள் போட்டு தண்ணியைத் திறந்து விட்டபடி வேலையைத் தொடங்கினேன். புல்லாகிப் பூடாய் புழுவாகி.

www.tamilarangam.net

வழமையாக எனக்கு முன்னமே வந்துவிடும் 'வலேரி' யை இன்னும் காணவில்லை. அவள் பிந்தி வந்தாலும் பிரச்சனையில்லை. என்னுடைய இரண்டு மணி நேர வேலையை ஒரு மணி நேரத்திலேயே செய்து முடிக்கும் திறமை அவளுக்கு மட்டுமே சொந்தம். பலசாலி. விவேகமானவள். எல்லாத்தையும் தன்னால் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை.

அவள் பிந்தி வந்தால் தான் என்ன?

நான் அவளுடைய வேலைகளையும் சேர்த்துச் செய்தேன். உலகத் தொழிலாளர்களே ! ஒன்றுபடுங்கள் ! பத்திரோனுக்கு யார் செய்கிறார்கள் என்று பிரச்சனையில்லை. 12 மணிக்கு குசினி 'ரெடி' யாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

பதினொன்றரைக்கு றோஸ்லின் வந்தாள். வந்ததும் வராததுமாக " 'வலேரி' வரவில்லை ! " என்று அலட்சியமாகக் கேட்டு விட்டு, ' ராத்திரி டிஸ்கோவுக்குப் போயிருப்பாள். இன்னும் எழும்பவில்லைப் போலும் ' என்று சொல்லியபடி மேலங்கியைக் கொழுவினாள்.

உண்மையாக இருக்கக் கூடும். வெள்ளி மாலை அவளுக்கு வேலையில்லை. 'டிஸ்கோ' வுக்கும் அதிகம் சனம் வரும்.

நோர்மண்டிக் கரையிலிருந்து நகரத்திற்கு வேலைக்காக வந்திருக்கிறாள். சிறிய வயது, சிறிய வாடகை அறை, பெருத்த நேர வேலை -- உணர்வுகள், விருப்பு வெறுப்புகள் -- ஆசைகள், அவலங்கள் எல்லாம் எந்தப் பெரிசு சிறுசுக்கும் அடங்காத .... என்ன சீவியம். சிறை வாழ்க்கை மாதிரி .

ஒவ்வொருவரையும் தனியே பிரித்து வைத்து இப்படி ஆத்தலைய வைக்கின்றதே. . .. . என்று மனசுக்குள் யோசித்துக் கொண்டிருக்கும் போது ' வலேரி ' கலகலத்துக் கொண்டு வந்தாள். குதூகலமாக இருந்தாள். அவளின் முகத்தில் தெரிந்த சுறுசுறுப்பில்

www.tamilarangam.net

அவள் நித்திரையாக இருக்கவில்லை என்பது திடமாகத் தெரிந்தது. என்னோடு சேர்த்து யாருக்குமே

அவள் பிந்தி வந்ததில் கோபம் வரவில்லை. ஒரு வேளை கோபமாக இருந்திந்தாலும் அவள் கலகலப்பும் சுறுசுறுப்பும் அதைத் துடைத்து எறிந்திருக்கும்.

கையில் நான்கு போட்டோக்கள் வைத்திருந்தாள். இடையில் எனக்கும் பார்க்கத் தந்தாள். படத்தில் எதுவும் பிடிபடவில்லை. வானத்தைப் படம் பிடித்த மாதிரி முகில் முகிலாய் ஏதோவெல்லாம் தெரிந்தது. பிளாக் அன்ட் வைற் படங்கள் !

இது என்ன ' போட்டோ ' என்று அவளையே கேட்டேன். அவள் தனது குழந்தையின் ' போட்டோ ' என்று , படத்தில் பரவியிருந்த முகில் திரளில் சந்திரன் போல் தெரிந்த ஒரு பொட்டை சுட்டிக் காட்டினாள்.

வயிற்றிலே ஆறு கிழமையாய் வளருது என்று வயிற்றை வருடிக் காட்டி விட்டு, றோஸ்லின் உடன் சம்பாஷணையைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

வலேரி என்னுடன் இரண்டு வருஷமாய் வேலை செய்து வருகிறாள். அவளின் காதலன் இராணுவத்தில் தொழில் பார்க்கிறான். பிரான்ஸின் சுதந்திர தின வைபவத்திற்கு பாரிஸ் வரும் போது இரண்டு கிழமை அவளுடன் தங்கி விட்டுப் போவான். நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் ஆங்கே பொசிந்து . . . . . அவனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக வலேரி எனக்குத் தெரிந்த நாளிலிருந்தே சொல்லிக் கொண்டு வருகிறாள். இப்போது மாசி மாதம். மார்கழியிலேயும் வலேரியின் காதலன் பாரிஸிற்கு வந்த கதையைக் காணோம். இவளும் விடுமுறை எடுத்துக் கொண்டு அவனைத் தேடிப் போனதாய் இல்லை.

www.tamilarangam.net

ஏதாவது இடையே கலியாணம் செய்து, அது எனக்குத் தெரியாமல் விட்டிருக்கவும் கூடும். தெரிந்து கொள்ளாவிட்டால் குடி முழுகிப் போகும் யாழ்ப்பாணத்தான் நான் என்ன பண்ணுவது ?

மாலை மூன்றரைக்கு சனங்கள் தணியும் வரை பொறுத்திருந்து அவளும் ஆறுதலாக வந்திருக்க , அவளிடம் கேட்டேன். " உனது திருமணத்திற்கு எனக்குச் சொல்லவில்லையே " என்று.

அவள் வியப்போடு " எனக்கு கலியாணமே நடக்கவில்லையே ! " என்று தோளைத் தூக்கித் தலையையும் ஆட்டி கையை விரித்தாள்.

" அப்ப ! நீயும் ஆமியும் இப்ப ஒருமிக்கத் தான் இருக்கிறீங்களா ? "

" இல்லை. அவனைப் போன ஆனிக்குப் பிறகு இன்னும் காணேல்லை "

" அப்ப ! பிள்ளை. . . . "

தோளைத் தூக்கித் தலையை ஆட்டித் தெரியாது என்றபடி மேலே யோசித்தபடி சொன்னாள்.

" அந்த நேரத்தில் நான் இரண்டு பேரோடு இருந்திருக்கிறேன் . யார் என்று சரியாகச் சொல்லத் தெரியவில்லை ".

" உனக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஆவல் இல்லையா ? "

" இல்லை. அப்படி ஒரு அவசியம் இல்லை. அப்படி நான் யோசிக்கவே யில்லை "

" அப்போ நீ யாரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாய் ? "

" ஆமியை "

" அவர் இதை விரும்புவாரா ? "

" இதுக்கும் கலியாணத்திற்கும் என்ன சம்பந்தம் . அவன் என்னை விரும்புகிறான். நான் அவனை விரும்புகிறேன். ஒருமிக்க இருக்கக் கூடிய சமயம் வரும்போது கலியாணம் செய்யக் கூடும் " என்று விட்டு எழும்பிப் போய் விட்டாள்.

மாலை இடைவேளையின் போது

www.tamilarangam.net

வேலை முடித்து வெளியே வரும்போது, வாசல் பக்கம் உள்ள மேசையில் இருந்து என்னவோ எழுதிக் கொண்டிருந்தாள்.

விடை பெறுவதற்காகக் கை குலுக்கினேன்.

ஆமிக்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று சந்தோஷ அலை தெறிக்க கடிதத்தில் சுண்டினாள்.

மெத்ரோக் கிழவி மனதில் மின்னி மறைந்தாள். கண்ணுக்கும் புருவத்திற்கும் இடைப்பட்ட பகுதிக்கு ஊதாக் கலர் சேர்த்து ஏதாவது ஒரு மெத்ரோவில் இப்போது சாயம் தீட்டிக் கொண்டிருப்பாளா ?

ரெஸ்ரோறன்றை விட்டு வெளியே றும் போது மனம் சந்தோஷித்தது.

1993 ம் ஆண்டிற்கான மலர் வெளியீட்டிற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அடுத்த சந்திப்பு பேர்லினில் மார்ச் மாதமளவில் இடம் பெறவுள்ளது. மார்ச் 8 பெண்கள் தினம் என்பதால் அதையொட்டிய ஆக்கங்களுடன், கதை, கவிதை, கட்டுரை போன்றவற்றை உங்களிடமிருந்து பெண்கள் சந்திப்பு மலர் வெளியீட்டுக் குழுவினர் எதிர்பார்க்கின்றனர்.

## பெண்கள் சந்திப்பு மலர்

அனுப்ப வேண்டிய முகவரி.

**Mallika**

**Haussmann str 107**

**7000 Stuttgart 1**

**Germany**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகளின் தொடக்கம்.

என்னைச் சுற்றி
துருப்பிடித்த இரும்புக் கம்பிகளோ
வாழ்வையும் உலகையும் பிரிக்கும்
கனத்த சுவர்களோ
பிரத்தியேக பூட்டுக்களோ இல்லை
ஆனாலும் நானொரு கைதி.

காலங்காலமாய்
தன்னம்பிக்கையை என்னுள்
வளரவிடாது தடுக்கப்பட்டிருப்பதால்
மனத்தால் நானொரு கைதி.

பிரபஞ்சமெங்கும்
உல்லாசமாக உலவித் திரியும்
காற்றை சுவாசிக்க
எனக்கு சுதந்திரமில்லை.
பாதையோரங்களில்
செல்லும் போது
என் கால்களை ஆயிரம் சங்கிலிகள்
பிணைத்திருப்பது போன்ற பிரமை.

பூட்டுக்குள்ளும் சுவர்களுக்குள்ளும்
என்னை நானே
மறைத்திருக்கும் வரை
அவர்களது பாரம்பரியங்கள்
வாழ்ந்து கொண்டிருக்கும்.

இனியாவது
காற்றை சுவாசிக்கவும்
வாழ்வின் அர்த்தங்களை
உணரவும்
முரட்டு விலங்குகளைத் தகர்த்தபடி
நானே வெளியில் வரவேண்டும்.
தொடரும் சுவடுகளில்
இது முதற்படியாகட்டும்.

**பிரியதர்ஷினி.**

www.tamilarangam.net

# அவர்கள் பார்வையில்......

நான் ஓர் அற்பப் புல்

போன்றவள் தான் .. .

எந்தப் புயற் காற்றுக்கும்

தலை வணங்கி

எந்த மழைக்கும் உடல் சிலிர்த்து

பெண்மை என்ற போர்வையில்

முடங்கிக் கிடப்பதாக

வெளிக் கண்களை மட்டுமுடைய

சில வேதாந்திகள்

அசிங்கப் பார்வையை என் மேல்

அள்ளி எறிகின்றனர்.

அவர்கள் பார்வைக்கு

நான் ஒரு புல் !

நசித்தெறியும் புல் மட்டுமே. . .

என்னில் முளைத் தெழும் முட்களை

அவர்கள் கவனித்தாகத்

தெரியவில்லை.

என்னுள் விழுது விட்டெழும்

கம்பீரமான ஆலமரம் . . .

ஒளி உமிழும் கலங்கரை விளக்கம். . .

எதையும் அவர்கள்

கவனிப்பதில்லை

என் செய்கைகளில் - ஒரு

தப்பர்த்தத்தை உருவாக்கி

அதன் மூலம் நிரந்தரமற்றதாய்

மகிழ மட்டுமே

அவர்களால் முடியும்.

வெளியே பஞ்சாகவும்

உள்ளே நெருப்பாகவும்

எனக்குள்ளேயே கனன்று கொண்டிருக்கும்

என்னை

அவர்கள் யாரும் அடையாளம்

காணபதில்லை.

ஆம் !

அவர்கள் பார்வையில்

ஓர் அற்பப் புல்

போன்றவள் தான் நான்.

ஆகர்ஷ்யா. 1991

www.tamilarangam.net

# கருக்கலைப்புச் சுதந்திரம் பெண்விடுதலையின் பிரிக்க முடியாத ஒரு அம்சம்

அகல்யா.

அயர்லாந்தில் சில மாதங்களுக்கு முன்பு நடை பெற்ற ஒரு வழக்கு உலகளாவிய அளவில் பலரது கவனத்தைக் கவர்ந்தது. பதின் மூன்று வயது சிறுமி ஒருத்தி அவளது தந்தையினால் பலாத்காரம் செய்யப்பட்டு அதன் மூலம் கருவுற்றாள். அந்த கருவை அவள் கலைக்க முற்பட்ட போது அயர்லாந்திலுள்ள கருக்கலைப்பிற்கு எதிரான சட்டங்கள் அவளைத் தடுத்தன. இதனை எதிர்த்து அவள் நீதி மன்றம் போனாள். வழக்கில் வெற்றி பெற்ற அவள் இங்கிலாந்திற்குச் சென்று தனது கர்ப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்தாள். இந்த வழக்கானது அயர்லாந்திலும், உலகளாவிய அளவிலும் கருக்கலைப்பிற்கான பெண்ணின் உரிமை தொடர்பான விவாதத்தை மீண்டும் கிளப்பியது.

பொதுவாக இப்போது சர்வதேச அளவில் புரட்சிகர சக்திகள் பலவீனப் பட்டும், பிற்போக்கு சக்திகள் ஊட்டம் பெற்று திகழ்வதும் வெளிப்படையானது. தமக்கு வாய்ப்பாக இருக்கும்

www.tamilarangam.net

நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு பிற்போக்கு சக்திகள், முன்பு ஒடுக்கப்பட்ட மக்கட் பிரிவினர் தமது போரட்டத்தின் மூலம் வென்றெடுத்த பல உரிமைகளைப் பிரித்தெடுப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். அவர்களது இலக்குகளில் ஒன்றாக மேலை நாடுகளில் பெண்கள் பெற்றுள்ள கருக்கலைப்பிற்கான உரிமையும் விளங்குகிறது.

அமெரிக்காவில் உள்ள கருக்கலைப்பு தொடர்பான சட்டங்களிலுள்ள தவறான அர்த்தப் படுத்தல்களைத் தீர்க்கு முகமாக கருக்கலைப்புச் சுதந்திரத்தை ஆதரிக்கும் புதிய சட்டம் ஒன்றை ஜனநாயகக் கட்சியினர் கொங்கிரசில் கொண்டு வந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு பழமைவாத சக்திகள் பெண்களின் கருக்கலைப்பு சுதந்திரத்திற்கு எதிரான கிளர்ச்சியில் இறங்கலானார்கள். ஆர்ப்பாட்டங்களைச் செய்தார்கள். கருக்கலைப்பு நிலையங்களின் முன் ( Abortion clinic ) மறியல் செய்தார்கள். இவ்விதம் பழமைவாதிகள் பெண்கள் நீண்ட காலப் போராட்டத்தின் மூலம் வென்றெடுத்த உரிமைகளில் கைவைக்க முனைவதை உணர்ந்த அமெரிக்கப் பெண்கள் வீதிகளில் இறங்கலானார்கள். நியூயோர்க் நகரத்தில் பெண்களது கருக்கலைப்பிற்கான உரிமையை ஆதரித்துப் பெண்கள் நடத்திய ஊர்வலத்தில் ஐந்து லட்சம் பெண்கள் கலந்து கொண்ட காட்சியானது 60 களிலும் 70 களிலும் வீசிய பெண்ணிலைவாத அலையை நினைவூட்டியது. இப்படியாக அமெரிக்கப் பெண்கள் தமது கருக்கலைப்பு சுதந்திரத்திற்கு ஆதரவான சட்டத்தை அமெரிக்க கொங்கிரசில் நிறைவேற்ற வைத்து விட்டார்கள். அண்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பழமைவாதப் பிரிவை பிரதிநிதித்துவப் படுத்திய ஜோர்ஜ் புஷ் கருக்கலைப்பை எதிரத்தும், அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் மிதவாதப் பிரிவைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கிளிங்டன் கருக்கலைப்புச் சுதந்திரத்தை ஆதிரத்தும் கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

இன்று சர்வதேச அளவில் நடைபெறும், பெண்களது கருக்கலைப்பிற்கான உரிமை தொடர்பான விவாதமானது, தமிழ் மக்களுடைய போராட்டத்தில் அக்கறையுடைய பிரிவினர் மத்தியிலும் தாக்கத்தை நிகழ்த்த தவறவில்லை. மனிதம் தனது 16 வது இதழில் நியூயோர்க்கில் பெண்கள் நடத்திய ஊர்வலம் பற்றிய செய்தியைப் பிரசுரித்து, கடைசியில் 'உயிர்களைக் கொல்லும் உரிமை வேண்டுமாம் இவர்களுக்கு' என்று ஒரு வரியைச் சேர்த்து தனது நிலைப்பாட்டை வெளியிட்டது. சமர் ஐந்தாவது இதழில் கருக்கலைப்புத் தொடர்பான ஒரு சர்ச்சையை எழுப்பியிருந்தது. தனது ஆசிரியர் குழுவிலிருந்த ஒருவர், தனது மனைவிக்கு கருக்கலைப்பு செய்வித்தற்காக அவரை ஆசிரியர் குழுவிலிருந்து வெளியேற்றி இருப்பதாக அறிவித்து இருந்ததுடன், அவரின் மீது "கொலைக் குற்றம்" சாட்டியிருந்தது.

இப்படியாக, பெண்களது கருக்கலைப்பிற்க்கான சுதந்திரம் தொடர்பான விவாதம் எமது அரங்கிற்கு வந்து விட்டது. இந்த விடயம் தொடர்பாக உள்ள பலவிதமான தவறான கருத்துக்களை களையும் விதத்திலேயே இக் கட்டுரை எழுதப்பட்டு உள்ளது.

www.tamilarangam.net

# பெண்கள் கருவைச் சுமப்பதை தீர்மானிப்பது யார்?

கர்ப்பம் என்பது ஒரு ஆணைப் பொறுத்தவரையில் ஒரு கண நேர சுகானுபவத்தின் விளை பொருள் மட்டுமே. பெண் கருத்தரிப்பதன் மூலம் ஆண் தனது ' ஆண்மையை' உலகறியச் செய்கிறான். தனது சொத்துக்களைப் பராமரிக்க தனது சந்ததி தொடர்வதற்கான வாரிசுகளைப் பெற்றுக் கொள்கிறான். ஆனால் பெண்களைப் பொறுத்தவரையில் கர்ப்பம் என்பது அவளது எதிர்கால வ ழ்க்கை முழுவதையுமே பாதிக்கக் கூடியது. பெண்ணின் உடல் , உள ஆரோக்கியத்தை மட்டுமன்றி கருவுறுவதும், பிள்ளை பெறுவதும் ஒரு பெண்ணை ஏனைய சமுக நடவடிக்கைகளில் இருந்து துண்டித்து அவளை வீட்டோடு கட்டி வைக்கும் தளையாகவும் அமைந்து விடக் கூடும். இப்படியாக பெண்ணின் உடல் உள ஆரோக்கியத்தை தீவிரமாகப் பாதிக்கக் கூடியது என்ற வகையிலும், பெண்களது எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்க வல்லது என்ற வகையிலும் கருவைத் தனது உடலில் சுமந்தாக வேண்டிய பெண்ணே எப்போது கருத்தரிப்பது என்பதையும், உருவான கருவைத் தொடர்ந்தும் சுமப்பதா அல்லது கலைப்பதா என்பதையும் தீர்மானிக்கும் உரிமை உடையவள் என்பதே இங்குள்ள அடிப்படை நியாயமாகும்.

இனப் பெருக்கம் என்பது சமூக மறு உற்பத்தியுடன் சம்பந்தப்பட்டது என்பதால் கருவைச் சுமப்பது தொடர்பான இறுதி முடிவெடுக்கும் உரிமை சமூகத்திடம் இருக்க வேண்டும் என்பது இதற்கு எதிராகக் கூறப்படும் வாதமாகும். ஆணாதிக்க சமூகத்தில் ஆதிக்க நிலையிலுள்ள ஆண்களே முடிவுகளை எடுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையில் இருப்பதால் இங்கு சமூகம் என்பது மறைமுகமாக ஆண்களையே குறிப்பிடுகிறது. அப்படியானால் இங்கு ஒரு நேரடியான கேள்வி எழுகிறது. தனது கருவைச் சுமப்பது தொடர்பான முடிவை எடுப்பது சம்பந்தப்பட்ட பெண்ணா அல்லது அந்தப் பெண்ணுக்கு நெருக்கமான உறவுள்ள ஆணா? ( இந்த ஆண் கணவன், காதலன், தந்தை போன்றவர்களுள் யாராவது ஒருவராக இருப்பர்)

முதலில் கர்ப்பம், பிரசவம் என்பவை பெண்ணின் சொந்த உடல் சம்பந்தப்பட்ட விடயங்களாகும் என்பது புரிந்து கொள்ளப் பட வேண்டும். ஆண் விரும்பினாலும் கூட இதில் பங்களிக்க முடியாது. அடுத்ததாக இன்று குடும்பத்திலுள்ள வேலைப்பிரிவினை காரணமாக குழந்தை வளர்ப்பு , ஏனைய வீட்டு வேலைகள் அனைத்தும் பெண்ணின் தலையிலேயே சுமத்தப் பட்டுள்ளன.

இதில் ஆண்கள் காத்திரமான பங்களிப்புச் செய்வது கிடையாது. குழந்தை வளர்ப்பு மற்றும் வீட்டு வேலைகள் முழுவதும் பெண்ணின் தலையில் சுமத்தப் படுவதால் பெண்கள் திருமணத்தின் பின்பு அதுவும் பிரசவத்தின் பின்பு சமூக தொழில் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்க வேண்டி ஏற்படுகிறது. அல்லது இத்துறைகளில் தமது வளர்ச்சி, உயர்ச்சிகளை நேரிடுகிறது. எனவே சொந்த உடலின் செயற்பாடு சம்ப்ந்தப்பட்ட விடயத்தில் தனது உடல், உள ஆரோக்கியங்களைப் பணயம் வைக்கும் தனது எதிர்கால சமூக நடவடிக்கைகளையே விலையாகக் கொடுக்க நேரும் பெண்ணுக்குப் பதிலாக , இந்த நடவடிக்கைகளுக்கு அந்நியமான, இதற்காக எந்தவித மான பெரிய

தியாகங்களையும் மேற் கொள்ளாத ஆண் முடிவு எடுப்பது என்பது எந்த வகையில் நியாயமானதாக அமைய

www.tamilarangam.net

முடியும்? முழுக்க முழுக்க பெண்ணின் உடல், உடற் செயற்பாடு சம்பந்தப்பட்ட அல்லது தனிப்பட்ட விடயமான இதில் ஆண்களுக்கு முடிவெடுக்கும் உரிமை மட்டும் அல்ல நிகழ்வுப் போக்கில் தலையிடும் உரிமை கூட இருக்க முடியாது என்பதே சரியான நியாயமாக அமைய முடியும்.

முன்பு கருத்தரிப்பது என்பது கடவுள் கொடுக்கும் வரமாகக் கருதப் பட்டது. இப்போது உயிரியல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக ஒரு பெண் எப்போது கருத்தரிப்பது என்பதையும் உருவான கருவைத் தொடர்ந்தும் சுமப்பதா இல்லையா என்பதையும் மிக இலகுவில் முடிவு செய்ய முடியும். அதாவது விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது பெண், தனது உடல், உடற் செயற்பாடுகள் மீது தனது சொந்தக் கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள்வதை சாத்தியமாக்கி உள்ளது. கருத்தடைச் சாதனங்கள், கருக்கலைப்பிற்கான வாய்ப்புக்களைப் பெண்களுக்கு சமூகம் அதாவது ஆண்கள் கிட்டாமற் செய்வதென்பது பெண்களின் உடல், உடற் செயற்பாடுகளின் மீது ஆண் தனது கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதாகவே அர்த்தப்படும்.

ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணின் உடலும், உடலின் செயற்பாடுகளும் பெண்ணை அடக்குவதற்குப் பயன் படுகின்றன. பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்த முனையும் ஆணாதிக்க கருத்தியலானது பெண், அவளது உயிரியல் அம்சங்கள் காரணமாக இயற்கையிலேயே ஆணுக்கு கீழ்ப்பட்டவளாகவே இருக்கிறாள் என்று போதிக்கிறது. இதனைக் கடுமையாக ஆட்சேபிக்கும் தீவிர பெண்ணிலைவாதிகள் சிலர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் தமது உயிரியல் செயற்பாடுகளை கைவிட வேண்டும் என வலியுறுத்துவர். கருத்தரிக்காமை, ஆண்களுடன் உறவு கொள்ளாமை போன்றவவை இவர்களது முன் மொழிவுகளில் சிலவாகும். ஆனால் பெண்ணின் உயிரியல் அம்சமானது தன்னளவில் பெண்னை அடிமைப் படுத்தி விடுவதில்லை. மாறாக பெண்களின் இந்த உடற் செயற்பாடுகள் மீது ஆண்கள் தமது கட்டுப்பாட்டை நிறுவும் போது தான் பெண்களின் சொந்த செயற்பாடுகளே அவளை அடக்கும் கருவிகளாகி விடுகின்றன. குடும்பத்தில் கணவன் -- மனைவி இடையிலான பாலுறவு, கர்ப்பம் ஆகியவற்றை கணவனே தீர்மானிக்கும் நிலைமை இருக்கும் வரை இந்த பெண்ணின் உடற் செயற்பாடுகள் பெண்ணை அடக்கும் பாத்திரத்தைத் தான் ஆற்றும்.

எப்போது பெண் தனது உடல், உடலியற் செயற்பாடுகளில் தனது சொந்தக் கட்டுப்பாட்டையும், இவற்றை தீர்மானிக்கும் சுதந்திரத்தையும் பெறுகிறாளோ அப்போது மட்டுமே பெண் உடலியல் அம்சங்களை அதிக அர்த்தமுள்ள தாகவும் மகிழ்ச்சிகரமான தாகவும் உணர்வது சாத்தியப்படும். இதனால் சமூகத்தில் சகல துறைகளிலும் தமது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் நிலை நாட்டப் போராடும் பெண்கள் தமது உடல் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் தமது தீர்மானிக்கும் உரிமைக்காகப் போராடுவது நியாயமானதே. இந்த இடத்தில் பிரித்தானிய நீதி மன்றமானது சட்டப்படியான கணவனே ஆனாலும், அவன் பெண்ணின் சம்மதம் இன்றி அவளோடு உடலுறவு கொள்ள முடியாது என்று அண்மையில் தீர்மானித்திருப்பதை நினைவு படுத்திக் கொள்ளல் பயனுள்ளதாக இருக்கும்.

www.tamilarangam.net

# கருக்கலைப்புச் சுதந்திரமும் --- பெண் விடுதலையும்

சமூக பொருளாதார, அரசியல், சட்ட உறவுகளில் பெண்கள் சமத்துவமாக நடத்தப்பட வேண்டும் என்பதை இன்று பலரும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் பெண், தனது சொந்த உடல் அதன் தொழிற்பாடுகள் போன்றவற்றில் தனது கட்டுப்பாட்டையும் தேர்விற்கான சுதந்திரத்தையும் நிலைநாட்டிக் கொள்ளாத வரையில் அவள் தனது உடலுக்கு வெளியில் உள்ள உறவுகளில் தனது கட்டுப்பாட்டையும் சுதந்திரத்தையும் நிறுவிக் கொள்வது சாத்தியப் படப் போவதில்லை. தனது உடலே தனக்கு அந்நியப் படுத்தப்பட்ட நிலையில் உள்ள பெண்ணால் எப்படி ஏனைய உறவுகளில் தனது சுயத்தை நிலை நாட்ட முடியும்? பெண் தனது சொந்த உடல் உடலியற் செயற்பாடுகள் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்ளாத வரையில் அவள் பாலியல் நுகர் பண்டமாகும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும் இருக்கும் நிலைக்கும் முடிவு ஏற்படப் போவதில்லை. எனவே கருக்கலைப்பிற்கான சுதந்திரம் என்பது பெண்விடுதலையின் பிரிக்க முடியாத அடிப்படையான கூறாகிறது.

பெண்ணின் உடலியற் செயற்பாடுகளான பாலுறவு, கர்ப்பம் போன்றவற்றின் மீது பெண்கள் தமது சொந்தக் கட்டுப்பாட்டை நிறுவுவதை தமது தேர்விற்கான சுதந்திரத்தை பெண் விடுதலைக்கான அடிப்படையான கோரிக்கைகளில் ஒன்றாகவே பெண்ணிலைவாதிகள் பல காலமாகக் கருதி வந்துள்ளார்கள். இவர்களது நீண்ட காலப் போராட்டத்தின் விளைவாக மேலைநாடுகளும் முன்னாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோசலிச நாடுகளில் பலவும் மூன்றாம் உலக நாடுகளில் சிலவும் பெண்களின் கருக்கலைப்பிற்கான சுதந்திரத்தை சட்ட பூர்வமாக அங்கீகரித்துள்ளன. இன்று இந்த நாடுகளிலும் உள்ள பழமைவாதிகளும், கத்தோலிக்க மத பீடமும் மட்டுமே கருக்கலைப்புச் சுதந்திரத்திற்கு எதிராக குலர் கொடுக்கத் துணிவர். கத்தோலிக்க மதபீடம் விவாகரத்து, கருத்தடை போன்றவற்றைக் கூட இன்று வரை அங்கீகரிக்க மறுத்து வருகிறது. ஆனால் மேலை நாடுகளில் அதன் குரலைக் கேட்பதற்குத்தான் -- குறைந்த பட்சம் இந்த விடயங்களிலாவது -- யாருமே தயாராக இல்லை.

## ஏன் எதிர்க்கிறார்கள் ............ ?

ஆணாதிக்க சமூக அமைப்பில் குடும்பம், பாலுறவு, இனப் பெருக்கம் போன்ற செயற்பாடுளே் அனைத்தும் ஆணுக்கு சாதகமாக ஆணாகதிக்க அதிகாரக் கட்டமைப்பைப் பேணும் வகையிலேயே ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. இதனால் இந்த ஒழுங்கு முறைகளில் ஏற்படும் எந்த ஒரு மாற்றத்தையும் எதிர்ப்பதில் ஆண்கள் முன் நிற்கிறார்கள்.

இவர்கள் தமது எதிர்ப்பிற்கான காரணங்களாக குடும்பத்தின் புனிதம், சமூக ஒழுக்க நெறி , மனிதாபிமானம் , மதம் போன்ற பல்வேறு காரணங்களைத் தூக்கிப் பிடித்தாலும் இவர்களது பதாதைகளுக்குப் பின்னால் மறைந்திருப்பது பச்சையான ஆணாதிக்கமேயாகும்.

பெண்கள் தமது உடல், உடற் செயற்பாடுகள் மீது தமது சொந்தக் கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டால் இதற்கு மேலும் பெண்களை அடக்குவதற்கான கருவிகளாகப் பெண்ணின் உடலும் உடற் செயற்பாடுகளும் இருப்பது முடிவுறும்.

www.tamilarangam.net

இதனால் ஆண்கள் தமது ஆதிக்கத்தின் ஒரு பகுதியை இழக்க நேரிடும். இதுவே ஆணாதிக்க சமூகம் பெண் தனது உடல் ரீதியாக சுய கட்டுப்பாட்டை தீர்மானிக்கும் சுதந்திரத்தை பெறுவதை எதிர்ப்பதற்குக் காரணமாகும்.

இன்று கருக்கலைப்பை எதிர்ப்பவர்கள் முன் வைக்கும் இரண்டு பிரதான காரணங்களாவன : பிறக்கப் போகும் குழந்தையின் உயிர் வாழும் உரிமை. அதாவது மனிதாபிமான மற்றது,
சமூக ஒழுக்க நெறி அதாவது கலாச்சார சீரழிவு என்பனவாகும் . இவை ஒவ்வொற்னையும் விரிவாகப் பரிசீலிப்பது அவசியமானது.

## மனிதாபிமானம்

கருக்கலைப்பை எதிர்ப்பவர்கள் இன்று முன் வைக்கும் பிரதான காரணமான பிறக்கப் போகும் குழந்தையின் உயிர் வாழும் உரிமை என்பதாகும். இனிமேல் பிறக்கப் போகும் ஒரு குழந்தையைப் பற்றி இவ்வளவு தூரம் அக்கறைப் படுவது நல்ல விடயம் தான். ! ஆனால் இதிலுள்ள பிரதான குறைபாடு யாதெனில் , நாம் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் உரிமையை - அதாவது தனது உடலையும் உடற் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கவும் பெண்ணுக்குள் உரிமையை விலையாகக் கொடுத்துத்தான் இனிமேல் பிறக்கப் போகும் குழந்தையின் உரிமை பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதைக் கவனிக்க தவறுவதாகும். மருத்துவ வசதிகள் போதியளவு கிடைக்காத மூன்றாம் உலக நாடுகளில் இன்றுவரையில் பிரசவம் என்பது பெண்களைப் பொறுத்தவரையில் " செத்துப் பிழைக்கும் " ஒரு செயலாகவே உள்ளது. அந்தஅளவிற்கு பல மூன்றாம் உலக நாடுகளில் பிரசவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரணங்கள் மிகவும் அதிகமானது. இப்படிப்பட்ட நாடுகள் பலகூட பெண்களின் கருக்கலைப்பிற்கான உரிமையை தடுப்பதன் மூலம் வேண்டாத கர்ப்பத்தை பலவந்தமாக திணிக்கின்றன. பெண்களின் உயிர்வாழும் உரிமை பற்றி கவலைப்படாத இந்த ஆளும் வர்க்கங்கள் பிறக்கப் போகும் குழந்தையின் உயிர்வாழும் உரிமை பற்றிப் பேசினால் அது கலப்பற்ற கபடத்தனமானதாகவே இருக்கும்.

ஒரு மனிதரின் உடல் அத்துமீறப்படாமை என்பது மிகவும் அடிப்படையான மனித உரிமையாகும். இது ஜனநாயகத்தின் மிகவும் அத்தியாவசியமான கூறாகும். இதனால்தான் சித்ததிரவதைகள் தொடர்பாக இவ்வளவு எதிர்புணர்வுகள் உலகளாவிய ரீதியில் எழுகின்றன. ஆனால் இதே நேரத்தில் பெண்ணின் உடல் மட்டும் சமூகத்தின் பேரால் மிகவும் சர்வ சாதரணமாகவே அத்து மீறப்படுகிறது.

வரவாறு கண்ட சரண்டல் அமைப்புக்களில் அடிமை உடமை சமுதாயத்தில் அடிமை மட்டுமே தனது உடலின் மீதும் உடற் செயற்பாடுகளின் மீதும் எந்தவிதமான சொந்தக் கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை. இந்தவகையில் பெண்களின் தமது உடல் மீதான சொந்தக் கட்டுப்பாட்டை விலையாகக் கொடுத்து ஆண்கள் மனிதாபிமானம் பேசுவது என்பது பெண்களை அடிமைகளாக நடத்துவதாகவே அர்த்தப்படும். இந்தவித்தில் பெண்கள் நவீன அடிமைகளாகவே உள்ளனர்.

பிறக்கப் போகும் குழந்தையின் உரிமை எனும் கருத்தை சற்று விரிவு படுத்தினால் அது பருவம் எய்திய ஆண்-- பெண் இருபாலாருமே தமது கருவளம் இருக்கும் காலம் வரையில் குழந்தைகளை உற்பத்தி செய்து குவிப்பதில் தானே போய் முடியும்.

www.tamilarangam.net

முன்பு பால்ய திருமணங்களை ஆதரித்தவர்களும் , இன்று வரை கருத்தடை முறைகளை எதிர்ப்பவர்களும் இதே காரணங்களைத் தானே கூறுகிறார்கள்.

உலகளாவிய அளவில் தமது சுரண்டல் மற்றும் ஒடுக்கு முறைகள் காரணமாக வறுமை, போசாக்கின்மை, நோய், பட்டினிச் சாவு, சிசு மரணம், விபச்சாரம் . . . . போன்ற பல்வேறு சமூக அநீதிகளுக்கு காரணமான ஏகாதிபத்தியங்களும் அவற்றின் ஆளும் வர்க்கங்களும் மனிதாபிமானம் பற்றிப் பேசினால் அது எவ்வளவு பெரிய அபத்தம் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே. ஜோர்ஜ் புஷ் மனிதாபிமானம் காரணமாகவே கருக்கலைப்பை எதிர்ப்பதாகக் கூறினால் அதனைவிட சிறந்த நகைச் சுவை வேறு இருக்குமா?

சமூக மறு உற்பத்தியில் ஆளும் வர்க்கத்திற்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால் அந்தப் பாரிய பொறுப்பை செய்யும் பெண்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில் அது வெளிப்பட வேண்டும். பிரசவ கால விடுமுறைகள், முறையான தாய் -- சேய் பராமரிப்புக்களை வழங்குதல், மேலதிக கொடுப்பனவுகள், வீட்டு வேலைகளில் ஆண்களின் முழுமையான பங்களிப்பு போன்றவை இந்த வகையில் அவசியமாக தேவைப் படுபவை. இவற்றை எதுவும் செய்யாமல் சமூக அக்கறை பற்றிப் பேசினால் அது ஆணாதிக்கத்தை காப்பதாகவே அர்த்தப்படும்.

## கலாச்சார சீரழிவுகள்.

மேலை நாடுகளில் பெண்களுக்கு கருக்கலைப்பு சுதந்திரம் வழங்கப் பட்டதே இந்த நாடுகளிலுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாச்சார சீரழிவுக்குக் காரணம் என்று வாதிப்போரும் உளர். ஏகாதிபத்தியத்தையும் அதன் சீரழிவுகளையும் அந்நாடுகளில் வாழும் ஒடுக்கப்பட்ட தொழிலாளர், பெண்கள் போன்றோர் நீண்ட கால போராட்டத்தின் மூலம் வென்றெடுத்த உரிமைகளையும் ஒன்றாகப் போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது. ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தீவிரமானது அந்த நாடுகளில் காணப்படும் அனைத்து சீரழிவுகளுமே என்ற மதிப்பீட்டிற்கு இட்டுச் செல்ல, அதன் மூலம் அந்நாடுகளின் தொழிலாளர்களும் பெண்களும் தமது நீண்ட காலப் போராட்டத்தினூடே வென்றெடுத்த --- மனித குலம் முழுவதற்கும் கிடைக்க வேண்டிய உரிமைகளின் பகுதிகளாக அமையும் --- உரிமைகள் சிலவற்றையும் நிராகரிக்கும் அளவிற்கு போய் விடக் கூடாது.

கருக்கலைப்புச் சுதந்திரம் கலாச்சார சீரழிவுகளுக்கு காரணமாகும் என்றால், இதே வாதங்கள் கருத்தடை முறைகளுக்கும், விவாகரத்திற்கும் எதிராக எழுப்பப் படலாம் என்பதை கவனிக்க தவறக்க கூடாது. சமூக ஒழுக்க நெறி என்பதை பெண்ணின் கர்ப்பப்பை சம்பந்தட்ட விடயமாக குறுக்கி விடுவது அனுமதிக்கப் பட முடியாததது. முதலாளித்துவம் பலவிதமான தவறான மதிப்பீடுகளை உருவாக்கியுள்ளது. இலாப நோக்கு, போட்டி மனோபாவம், நுகர் பண்ட வெறி. . . . இது போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம் . சாதரணமாக அன்றாட வாழ்வில் இந்த விதமான பல மதிப்பீடுகளை எந்தவித விமர்சனமும் இன்றி ஏற்றுக் கொள்ளும் பலர் ஒழுக்க நெறியென்று வந்தவுடன் அதுவும் பெண்கள் பற்றிய விடயத்தில் மட்டும் ஏகாதிபத்தியத்தின் சீரழிவுகளைத் தேடுவது விநோதமானது.

www.tamilarangam.net

ஒழுக்க நெறிகள் என்பவை ஒரு சமூகத்தின் ஒட்டு மொத்தமான சமூக விழுமியங்களுடன் தொடர்பு படுத்தி புரிந்து கொள்ளப் படவேண்டும். சமூக வளர்ச்சியுடன் தொடர்ந்து மாறிக் கொண்டு வருவதாகவும் புரிந்து கொள்ளப் படவேண்டும். உயர்வான சமூக ஒழுக்க நெறிகள் என்பவை சமூகத்திலுள்ள அனைவரையும் சமத்துவமாக நடத்துபவையாகவும் அனைவரது பங்கு பற்றுதலுடனும் உருவாக்கப் படுவதாகவும் அமைய வேண்டும். பெண்களின் உரிமைகளை விலையாகக் கொடுத்து ஆண்களால் உருவாக்கப் படுவதற்குப் பெயர் ஒழுக்க நெறி அல்ல. ஆணாதிக்கம் என்பதே ஆகும்.

முடிவாக:

சமூக விடுதலை என்பது பெண்விடுதலையையும் தன்னுள் கொண்டிருக்கும் போது மட்டுமே அது அர்த்தம் உடையதாக இருக்க முடியும். கருக்கலைப்பிற்கான சுதந்திரம் என்பது பெண் விடுதலையின் தவிர்க்க முடியாத அடிப்படையான ஒரு கூறு என்றான பின்பு சமுதாய மாற்றத்தில் அக்கறையுள்ள அனைவரும் பெண்களின் கருக்கலைப்பிற்கான சுதந்திரத்தையும் அங்கீகரிப்பது அவசியமானது. இந்த உரிமையை எதிர்க்கும் ஆணாதிக்க கருத்தியலை எதிர்த்துப் போராடுவது சமூக மாற்றத்தில் அக்கறை உள்ள ஒவ்வொருவரதும் கடமையாகும். சமூக மாற்றத்தை உண்மையிலேயே விரும்பும், அதனை ஆழமாக நேசிக்கும் எவரும் தமது சமூகத்திலுள்ள பிற்போக்குக் கருத்துக்களை உடைத்துக் கொண்டு வருவதற்கு தயங்கக் கூடாது. இதில் அவர்கள் காட்டும் தயக்கமானது அவர்கள் சமூகத்திலுள்ள பழமைவாதக் கருத்துக்கள், ஆணாதிக்க சிந்தனைகள் போன்றவற்றுடன் கணக்குத் தீர்த்துக் கொள்ளவில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதையே காட்டும்.

தமிழ் சமூகம் மிகவும் பிற்போக்கான கருத்துக்கள் பலவற்றையும் கொண்டுள்ளது. அத்துடன் பெண்ணிலைவாத கருத்துக்கள் தமிழ் சமூகத்தில் விரிவாக அறிமுகப் படுத்தப் படாத ஒரு குறைவும் இருக்கவே செய்கிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தமிழ் சமூகத்தின் முற்போக்கான பிரிவினர் மத்தியிலும் கூட ஆணாதிக்கக் கருத்துக்கள் பலமாக இருப்பதற்கான வாய்ப்புகள் நிறையவே உண்டென்பதும் புரிந்து கொள்ளத் தக்கதே. ஆனால் இந்த முற்போக்குப் பிரிவினர் சர்வதேச அளவில் நடைபெறும் விவாதங்களை கூர்மையாக அவதானிக்கவும், அங்கு முன் வைக்கப்படும் கருத்துக்களின் வெளிச்சத்தில் தமது நிலைப் பாடுகளை மறுபரிசீலனை செய்யவும் , தேவைப்பட்டால் மாற்றிக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். அப்படியாக அல்லாமல் வெறுமனே பழமைவாதக் கருத்துக்களை கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பது தமிழ் சமூகத்தின் பிற்போக்கு சக்திகளைப் பலப் படுத்தவே உதவும்.

தனது ஆசிரியர் குழுவில் ஒருவர் அங்கம் வகிக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக கணவன் -- மனைவிக்கு இடையிலான அந்தரங்கமான உறவுகளில் 'சமர்' அத்துமீறி தலையிட்டதுடன் அவற்றைப் பகிரங்கப் படுத்துவதன் மூலம் தனது அரசியல் முதிர்ச்சியின்மை, அரசியல் நாகரீகமின்மையைத் தான் வெளிப் படுத்தியுள்ளது. இந்த அணுகுமுறையானது சமர் எந்த நோக்கங்களுக்காக போராடுவதாகக் கூறிக் கொள்கிறதோ அந்த நோக்கங்களுக்கு எதிரான விளைவுகளையே கொடுக்கக்

www.tamilarangam.net

கூடியதாகும். ஒடுக்கப்பட்ட பெண்கள் 'சமர்' 'மனிதம்' போன்ற சஞ்சிகைகளிடம் எதிர்பார்ப்பது, பெண்விடுதலையை ஆதரித்து அவ்வப்போது வெயிடப்படும் மேலெழுந்த வாரியான கட்டுரைகளையல்ல. கருக்கலைப்பு போன்ற முக்கியமான பிரச்சனைகளில் புரட்சிகரமான நிலைப்பாடுகளையே. மனிதம் சமர் போன்றவை பெண்விடுதலையை ஆதரிக்கும் போதும் இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சனைகளில் தவறிழைப்பது ஏன்? தனது உடல் தனக்கே அந்நியமான நிலையில் ஒரு பெண்ணின் உணர்வுகள் எப்படிப் பட்டதாக இருக்கும் என்பது சாதரணமாக ஆண்களால் புரிந்து கொள்ளப்பட முடியாததே இதற்கு காரணமாகும். தமது உரிமைகளுக்கு பெண்கள் தாமாக முன்வந்து போராடாத வரையில் முற்போக்கு எண்ணமுடைய ஆண்கள் கூட பெண்ணடிமைத்தனத்தின் பல்வேறுபட்ட பரிணாமங்களை சரியாகப் புரிந்து கொள்வது கூட சிரமமானதே. 1992.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுடுமணல் மனிதர்கள்

## ஓரங்க நாடகம்

**சுகன்**

வீடொன்றின் முன்புறத் தோற்றமுள்ள திரை.

மேடையின் முன் மையத்தில் கார்த்திகை விளக்கீட்டிற்கு வாழைக்குத்தி நாட்டியிருப்பது போல துப்பாக்கி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

துப்பாக்கியுடன் தலைகீழாக ஒரு பெண் கட்டி வைக்கப்பட்டிருக்கிறாள்.

அதற்கு நேரே பின்புறமாக மேசை, கதிரையில் இருவர் மேசை மீது தலைவைத்துத் தூங்குவதும் ஒருவரை ஒருவர் பார்ப்பதும் எழுவதும் முறைப்பதுமாக அந்தரப்படுகின்றனர்.

பார்வையாளர்களில் ஒரு பெண் ( சுமார் 50 வயது )

ஆர் தம்பி ! இப்பிடி பெண்ணைப் பிறந்தவளை அநியாயமாக் கட்டி வைச்சது ?

அவிழ்த்து விடுங்கோப்பு , உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் !

கதிரைகளிலில் இருந்த இரு ஆண்களும் எழுந்து வருதல்

எப்பிடிக் கட்டிறது, எப்ப அவிழ்கிறது எண்டு எங்களுக்குத் தெரியும், வாயைப் பொத்திக் கொண்டு இரு கண்டியோ !

( பெண் மெதுவாக இருந்த இடத்தில் அமர்தல். இருவரும் மீண்டும் தங்கள் கதிரைகளில் பழையபடி போய் அமர்தல் )

www.tamilarangam.net

மேடையின் இரு புறமும் கடிதங்களை படித்தபடி பலர் போய் வருகிறார்கள்.

பாத்திரம்

அவள் இயக்கத்திற்குப் போன குமரி எண்டதாலை இஞ்சை ஒருதரும் கலியாணம் கட்ட மாட்டினமாம். அவளை உங்கை கூப்பிட்டு ஆருக்கும் கட்டிவை ! . . . . . . .

பாத்திரம் II

அவள் வேலைக்குப் போகச் சொன்னாலும் போறாளில்லை. உங்களை வேலைக்குப் போற பெட்டையாப் பாத்தெல்லோ எனக்கு அனுப்பச் சொன்னனான்.

பாத்திரம்

அவரிட்டை அடி வாங்காத நாளேயில்லை. இனியும் என்னால இந்த அரிகண்டத்தை தாங்க முடியாது. நீ அனுப்புகிறேன் எண்ட காசை கெதியா அனுப்பி அவரை உங்க கூப்பிடு . . . . .

பாத்திரம் IV

எங்கோ தூரத்திலிருக்கிறது நிலவு, இரகசிக்க அருகில்லாத உஷா -- என் அன்புத் தெய்வமே ! செத்த குழந்தைப் பிள்ளையின் பிணத்தின் மேல் தலையை வைத்துப் படுத்திருப்பது போல் நினைத்து இரவில் விழித்துக் கொள்கிறேன் தாயே !

பாத்திரம் V

பெரிய தம்பி , உனக்கு விருப்பமான இடத்தைச் சொல்லு. நாங்கள் பேசி முடிக்கிறோம். சீதணக் காசை அப்பிடியே வட்டிக்குக் கொடுக்கிறோம் -- உன்ரை ஒரு சதமும் எங்களுக்கு வேண்டாம். இப்பவே உனக்கு 32 வயது நாளைக்கு நோய் நொடியெண்டு நீ விழுந்து விட்டால் உன்னைத் தூக்கிப் போட்டு பாக்கிற நிலையிலை உன்ர பிள்ளை இருக்க வேணும். கலியாணம் செய்தவுடனை கூட பிள்ளை பிறக்குமெண்டில்லை !. . . .

பாத்திரம் VI

எத்தினையாம் திகதி ஏறினனீர். . . ?

கற்புக்கு ஒரு பிரச்சனையும் இல்லைத்தானே !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாத்திரம்

தமிழ் ஆக்கள் நிறையப் பேர் வெளிநாடு போவதற்காக இங்கு வந்திருக்கிறார்கள். நெடுந்தீவு ஆட்கள் கூட . இங்குள்ள ரிஜிஸ்ரர் ஆபிசில் நாங்கள் ரிஜிஸ்ரர் பண்ணின படமும் நேபாளின் ' பசுபதி நாத் ' கோயிலின் படமும் , ரிஜிஸ்ரேசன் முடிந்தபின் ஹோட்டலில் தங்கியிருந்த எல்லாத் தமிழாக்களையும் கூப்பிட்டு ' பார்ட்டி ' குடுத்த படமும் இத்துடன் அனுப்புகிறேன்.

பாத்திரம்

இஞ்சை இயக்கப் பெடியள் இருக்கிறாங்கள் நாங்கள் சந்திக்காமை இருக்கிறது நல்லது. நான் வரச் சொல்லி எழுதும் வரைக்கும் நீங்கள் இஞ்சை வாறதைப் பற்றி தயவு செய்து நினைக்க வேண்டாம். இன்னும் கொஞ்சக் காலந்தானே !

பாத்திரம் IX

அப்பு, அப்பாவுக்கு சரியான சுகமில்லை. நீ உழைச்சுக் கொடி செய்து தந்த பிறகுதான் நான் கழுத்திலை கட்டுவேனெண்டு உனக்குத் தெரியுந்தானே. பதினைஞ்சு வரிசமா கொடி இல்லாமை இருந்தது அப்பாவுக்கும் எனக்கும் பிரச்சனையில்லை -- இப்ப அப்பாவுக்கும் சரியான சுகமில்லை கோயிலுக்கு போட்டுக் கொண்டு போகக் கூட கழுத்திலை ஒண்டுமில்லை . அப்பா உனக்கு சொல்லச் சொல்லிச் சொன்னதாலைதான் நான் உனக்கு எழுதுகிறேன். அப்பா இப்ப கொடி கட்ட வேணுமெண்டு விரும்புகிறார் என்ர விருப்பமும் அதுதான். எவ்வளவு கெதியா அனுப்ப முடியுமோ அவ்வளவு கெதியா அப்பு காசை அனுப்பி வையடி அப்பாவுக்கு சரியான சுகமில்லை.

பாத்திரம் X

நாடகத்தில் நீங்கள் இருவரும் வில்லால் முகத்தை மறைத்து விட்டீர்கள். மேலும் அருச்சுனன் காவியுடை தான் கட்ட வேண்டும் . கூடியவரை மஞ்சள் காவியுடை அணிய வேண்டும். . . .

www.tamilarangam.net

பாத்திரம்

என்னோட ஒரு girl வந்தாதானே மாப்பிள்ளைதான் காசு கட்டி கூப்பிடுகின்றார். அவா இங்கு நிற்பவரோட காதல் , அந்த மாதிரிக் காதல். ஏஜென்சி சிவநாதன் அண்ணைக்கும் தெரியும் - பேசினவர் - அவர்கள் விலத்திற பாடா இல்லை . இந்த நாளில் ஒருநாளும் பெண்ணுகளை விட்டு விட்டுப் போகக் கூடாது. போகும் போது கையோடு கூட்டிக் கொண்டு போய் விட்டால் பிரச்சனை இல்லை. 2 பிள்ளைக்காறியே Bankkok வந்தவுடன் வேறு ஒருவருடன் தொடர்பு . இப்பிடி நிறைய. இதை யாரிடம் சொல்வது. நான் எப்ப வந்து சேருவேன் என்று இருக்கிறேன். நல்ல நேர்த்தி ஒன்று போடும். நான் ஒரு கரைச்சலும் இல்லாமல் சுகமாக வந்து சேர வேணும். கோயிலுக்கு ஒழுங்கா போறனீரோ ? .

....

பாத்திரம் IIX

தற்போதுதான் இரண்டு மாதங்களுக்குப் பின்பு ஓர் Room கிடைத்துள்ளது. முன்னால் அழகான அமைதியான நாள்தோறும் பராமரிக்கப்படும் சுடலை. அடுத்தாக எனது Room சமரசம் உலாவும் இடத்திற்கு மிகவும் அருகிலை இருக்கிறன். இப்போதுதான் பழம் பிடுங்கும் வேலை தொடங்கியுள்ளேன். கூடிய விரைவில் காசு அனுப்பி வைக்கிறேன்.. . . .

திரையின் பின்னாலிருந்து

( நீண்ட நாட்களாக யுத்தம் ஏதுமில்லை. சமாதான முயற்சிகள் நம்பிக்கையளிப்பதாக பத்திரிகைச் செய்திகளில் இருந்து தெரிகிறது. தமிழ்ச் சமூகம் இயங்காது விட்டுவிடுமோ என்ற பயம் எங்கும் ஏற்படுகிறது. )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதிரையுடன் மேலும் ஒருவர் மேடைக்கு வருகிறார். ஏற்கனவே இருந்த மேசையை தனக்கு வசதியாக திருப்பி வைக்கிறார். அகதிகள் கியூவில் அவரிடம் வருகின்றனர்.

. . . . . . . . . . . . . .          . . . . .          . . . . . . . .   பாரிஸ் அலுவலகம் .

யுத்த நிதிக்கு அன்பளிப்பு செய்ய வந்தவர்கள் ஒருபுறமாகவும் தமது உறவினர்களின் நிலையை அறிய வந்தவர்கள் இன்னொரு புறமாகவும் நிற்கும்படி அலுவலர் கேட்கிறார். அகதிகள் தடுமாறுகின்றனர்.

தமது அலுவல்கள் அனைத்தையும் முடித்துக் கொண்டு போகிறார்கள்.

துப்பாக்கியுடன் தலைகீழாகக் கட்டப்பட்ட பெண் தனியே விடப்பட்டிருக்க அரைவாசி திரை மூடுகிறது.

பார்வையாளர் கூட்டத்திலிருந்து ஒருவர்

என்னத்து உதை மட்டும் உதிலை விட்டு விட்டு போறீங்கள் ? உதையும் கொண்டு போங்கோ !

மேடையிலிருந்த இருவரும் தங்கள் சேட்டைக் கழற்றிக் அதன் மேல் கொழுவி விட்டு போகின்றனர்.

திரை மூடுகிறது.

www.tamilarangam.net

# மனிதம் தேடும் மரணங்கள்

நிரூபா.

ஒற்றை ஒற்றையாய்
நெட்டி நிமிர்ந்து
நிற்கின்ற மரங்கள்.

உணர்வுகளின் உலர்வுகளால்
உறவறுத்து விடைபெற்று
மண்ணில் மரணிக்கும்
பாறைகள்.

ஒற்றையடிப் பாதையில்
ஓரமாய் நின்றிருந்த
ஓர் சிறுவன்
கரங்களில் கனமாக
இயந்திரத்தை இயக்கியபடி
முடியிறக்கி முதிர்ந்துபோன
பனம் பழத்துாள்
பசியைப் பார்வையாக்கி
பறிகொடுத்து
வயிறு ஒட்டிய
குட்டிநாய்.

சோக கீதம் சொரிந்தபடி
வந்த தென்றல்
மெதுவாய்
ஓர்கதை சொன்னது.

" பெண்டுகளும் போயாச்சு
பெருமைகளும் தந்தாச்சு
சுடுவதில் அச்சமில்லை.
உயிர்களெல்லாம் துச்சம்
நட்பும் நலனும்
நாதியற்றுப் போச்சு
நாய்கள் தான் நாட்டில் மிச்சம்
அளவிட முடியாது
அராஜகத்திற்கு வணக்கம் ! "

முடிவுரை முடிக்கும் முன்
பனை மரத்திலிருந்து
பழம் உதிர்ந்து விழுவது போல
வானத்து வழிவந்த
வெடி வெடிச்சு
பனை வளவு பாலையாகிப் போனது.

தெற்குத் திசையிலிருந்த
தென்னந் தோப்புக்குள்
உஷ்ணமாகி ஓடியது
தென்றல் !

www.tamilarangam.net

# சக்தி

மேற்கத்தைய உலகப் பெண்கள் தமது பாகாப்பிற்கும் உரிமைக்குமான கவசமாக பெண்ணிலைவாதத்தைத் தரித்துக் கொண்டுள்ளார்கள். மனித இனத்தின் சரிபாதியும் அதன் மறு உற்பத்திக் கர்த்தாவுமான பெண்களின் தனித்துவத்தையும் அவர்களின் மானிட உரிமைறளையும் வெளிப்படுத்தும் கோட்பாடாக பெண்ணிலைவாதம் விளங்குகிறது. என்ன துர்அதிஷ்டமோ தமிழ் பெண்ளெ் மத்தயில் இன்றுவரை பெண்ணிலைவாதமானது ஜனரஞ்சகப் படுத்தப் படாமலே இருந்து வருகிறது.

சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் சமூகப் பெண்கள் ஒருபுறம் பேரினவாத ஒடுக்குமுறைக்கும் மறுபுறம் சொந்த சமூகத்தின் ஆணாதிக்க ஒடுக்கு முறைகளுக்கும் ஆளாகி அடிமை நுகத் தடியில் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

www.tamilarangam.net

பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் போக்கு தமிழ் பெண்களிடம் காணப்பட்டாலும் ஆணாதிக்க் எனும் பயங்கர விலங்கை அவர்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை யாதலால் அதைப் பற்றிய சிந்தனையேயின்றி இதுதான் பெண்களுக்கான வாழ்க்கை முறை எனும் பாரம்பரிய கருத்துக்களுக்கு அடிமையானவர்களாகவே இருக்கிறார்கள். பெண்களின் இந்நிலையானது முழுச் சமூகமுமே தனது பூரண விடுதலையை நோக்கி முன்னேறுவதற்குத் தடையானதாகும்.

ஒரு சமூகத்தின் தன்மையை அச் சமூகத்தில் பெண்களின் நிலையிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும் என்கிறார் ஃபூரியோ . பெண்களின் சமத்துவம் பேணப்படாத எந்த சமூகமுமே அது எத்தகைய புரட்சியை சாதித்தாயிருந்தாலும் அது தன்னளவில் பிற்போக்கானதுதான். ஈழவிடுதலைப் போராட்டமானது புரட்சிகர சக்திகளின் கைகளுக்கு மாறினாலும் கூட பெண்கள் தமது அடிமை நிலையினை உணர்ந்து தனித்துவமான போராட்டத்தை முன்னெடுக்காத வரையில் விடுதலையானது பிற்போக்கின் வேர்களைக் கொண்டதாகவே இருக்கும்.

இன்று தமிழ்ப் பெண்களின் மத்தியில் விழிப்புணர்வு பெற்ற ஒரு சிலர் பெண்ணிலைவாதம் பற்றிய கருத்துக்களில் பரிச்சயமும் ஈடுபாடும் கொண்டிருந்தாலும் தமது வர்க்க, வாழ்நிலை காரணமாக அவர்கள் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே தமது செயற்பாடுகளை முடக்கிக் கொள்கிறார்கள்.

விழிப்புணர்வு பெற்ற பெண்கள் பலரினுடைய ஆக்கங்கள் ஆங்கிலத்திலேயே வெளிவருவதனால் தமிழ் சமூகத்தின் பரந்த பிரிவினரிடையே பெண்ணிலைவாதக் கருத்துக்கள் சென்றடையாமல் இருப்பதற்கு ஒரு காரணமாகும். இந்தக் குறைபாடு இன்று பலராலும் உணரப்படுகிறதாயினும் இதற்கான மாற்றுத் தீர்வுகள் நடைமுறைக்கு வராமலே இருக்கின்றன.

பெண்ணிலைவாதக் கருத்துக்களை தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகப் படுத்துவதும் , அடிமை

www.tamilarangam.net

நிலையிலுள்ள பெண்களை விழிப்படையச் செய்து ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கு அணிதிரட்டலும் விழிப்புணர்வு பெற்ற பெண்கள் ஒவ்வொருவரினதும் முதற் கடமையாக இருக்கிறது.

இனிவரும் காலங்களில் விழிப்புணர்வு பெற்ற பெண்கள் இக் குறைபாட்டை நீக்கும் வகையில் பெண்ணிலைவாதக் கருத்துக்கள் பெண்கள் அனைவரையும் சென்றடையும் வகையில் பரப்புவதில் பங்களிப்பினை வழங்க முன் வரவேண்டும்.

**சக்தி** மிகவும் தாமதாகமாகவே உங்களிடம் வருகிறாள். வழமை போல தாமதத்திற்கு வருந்துவதோடு வாசகர்களின் பொறுமைகளை சோதித்தமைக்கும் மன்னிக்க வேண்டுகிறோம். தொடர்ந்து இது போன்ற தவறுகள் நிகழா வண்ணம் இருக்க இயன்றவரை முயற்சிக்கிறோம்.

சென்ற வருடம் ஏப்பிரலில் ஜேர்மனியில் இடம் பெற்ற இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்ட பல பெண்களிடம் சக்திக்கு ஆக்கங்களை அனுப்பி வைத்து உதவும்படி கேட்ட போது சக்திக்கா என்று பலர் ஒதுங்கியமையையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. இந்த இதழ் இயன்றவரை இலகுவாக்கப்பட்டுள்ளது. வாசியுங்கள். விமர்சனங்களை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

சக்தியை வெளியிடுவதற்கு உற்சாகமும் ஒத்துழைப்பினையும் வழங்கிய நண்பிகள் , நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்வதோடு தொடர்ந்தும் உங்கள் அனைவரது உதவிகளையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போய் வருக !

ஒரு குறைமாதச் சிசுவின் அசைவாய்
அவன் நினைவு
இன்னும் நெருக்கமாய். . .
இரவுகளில் மட்டுமே ஒலிக்கும்
அந்தப் பறவையின் கதறல் போல
அது துயரம் மிகுந்ததாய்
நினைவு கூரப்படுகிறது.
உயர்ந்த மதிலைத் தாண்டிக் குதிக்கிற
உதய ஒளியிலும்
நிசி நேர நிலவிலும் இருந்து
இனி அது மறைந்துவிடும்.
அலைகளில் செறிகிற ஈரம்
கரையும் வரையும் --
அன்பே . .

நாம் இணைதல்
அசாத்தியம்
மணலில் பதிந்து போன சுவடுகள்
அனைத்தையும் காற்றுக் கௌவட்டும்.
" அந்த அத்தியாய் நிறைவில்
எஞ்சியவை --
ஒரு சொல்
ஒரு முத்தம்
மட்டுமே "

கொற்றவை.

1990